விலை ரூபா: 5.00

பக்கங்கள் :- எட்டு

Registered as a News paper in Sri Lanka

மங்கையர் மனம் கொள்ளை கொள்ளும் தங்க நகைகளுக்கு



சாரங்கா நகை மாடம்

177/4, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

T.P:- 2480

# வலம்புரி
# VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 ஆடி 03 வெள்ளிக்கிழமை (19.07.2002) தொலைபேசி 3378 ஒலி 212

## இந்திய குடியரசுத் தலைவர் தேர்தலில் அப்துல் கலாம் அமோக வெற்றி!



(புதுடில்லி)

இந்தியாவின் பன்னிரண்டாவது குடியரசுத் தலைவர் தேர்தலில் இந்திய தலைமை விஞ்ஞானியும் இந்திய விஞ்ஞானியுமான அப்துல் கலாம் அதிகப்படியான வாக்குகள் வித்தியாசத்தில் அமோக வெற்றியீட்டியுள்ளார்.

கடந்த திங்கட்கிழமை இடம் பெற்ற குடியரசுத் தலைவர் தேர்தலின் வாக்குகள் எண்ணும் பணி நேற்றுப் பிற்பகல் 3மணிக்கு முடிவடைந்தது. தேசிய ஜனநாயகக் கூட்டணி, காங்கிரஸ் சார்பாக போட்டியிட்ட அப்துல்கலாம் 4ஆயிரத்து 785 வாக்குகள் பெற்றார்.

அப்துல்கலாமை எதிர்த்துப் போட்டியிட்ட இந்திய சுதந்திரப் போராட்ட வீராங்கனை லஷ்மி செகாலை 449 வாக்குகள் மாத்திரமே பெற்றார்.

குடியரசுத் தலைவர் தேர்தலில் அப்துல்கலாம் வெற்றியீட்டியுள்ளார் என்பதை குடியரசுத் தலைவர் தேர்தல் தலைமை அதிகாரி நேற்று உத்தியோக பூர்வமாக அறிவித்தார். இதனை அடுத்து இந்தியப் பிர தமர் அடல்பிஹாரி வாஜ்பாய் தொலை பேசி மூலம் அப்துல் கலாமுக்கு வாழ்த்துத் தெரிவித்தார். குடியரசுத் தலைவர் கே.ஆர்.

(02ம் பக்கம் பார்க்க)

## வர்த்தக உடன்படிக்கையில் அமெ- இலங்கை கைச்சாத்திடும்

(கொழும்பு)

இலங்கையும் அமெரிக்காவும் எதிர்வரும் 25ந் திகதி வெள்ளிக்கிழமை வர்த்தக ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடவுள்ளன.

இன்று அமெரிக்கா செல்லும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா 24ந் திகதி அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷைச் சந்தித்த பின்னர் 25ந் திகதி வர்த்தக ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடவுள்ளார். இந்த வர்த்தக உடன்படிக்கையின்படி தைத்த ஆடைகளை அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்வதற்கு வழிவகுக்கும் என்றும் அங்கிருந்து ஆடைகளுக்கான துணி வகைகள் இறக்குமதி செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பிரதேசசெயலர் பிரிவு உட்பட்ட உழவு இயந்திர உரிமையாளர்களுக்கான அவசர கலந்துரையாடல் நீர்வேலியில் அமைந்துள்ள விடுதலைப்புலிகளின் அரசியல்

(08ம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு அமைச்சின் செயலரின் கருத்துக்கு மறுப்பு

# புரிந்துணர்வு உடன்படிக்கையை மீளாய்வு செய்யத் தேவையில்லை

## அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

(நமது நிருபர்)

**அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே ஏற்பட்டுள்ள யுத்தநிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கையில் மாற்றங்கள் செய்ய வேண்டிய அவசியம் எதுவும் இல்லை,**

**யுத்த நிறுத்த உடன்படிக்கை அரசினது பூரணமான ஆவணமாகும் அதில் அரசு பூரண திருப்தி கொண்டுள்ளது எனினும் விடுதலைப் புலிகளுடன் ஆரம்பிக்கப்படவிருக்கும் சமாதானப் பேச்சுவார்த்தைக் கான திகதி இன்னமும் நிர்ணயிக்கப்படவில்லை**

**இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.**

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் அமைச்சரவைப் பேச்சாளர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் செய்தியாளர் மாநாட்டில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

நடத்தத் தேவையில்லை. இலங்கையின் எந்தப் பிரதேசம் சம்பந்தமாகவும் பொறுப்புக்கூற வேண்டிய கடப்பாடு அரசுக்கே உண்டு என்று கூறிய அவர்;

கருத்தை முற்றாக மறுத்தார். புரிந்துணர்வு உடன்படிக்கையில் சுதந்தரமான கடற்போக்குவரத்துத் தொடர்பாக போதிய தெளிவின்மை காணப்

## லொறிக்கு மேலிருந்து சென்ற மாணவன் வீழ்ந்து படுகாயம்

(ஏழாலை)

லொறிக்கு மேலே அமர்ந்திருந்து பிரயாணம் செய்து கொண்டிருந்த மாணவன் வீதிக்கு குறுக்காகச் செல்லும் மின்சார வயறில் தடக்கி தூக்கிய வீசப்பட்டு லொறிக்குப் பின்னால் வீதியில் சென்று கொண்டிருந்த மோட்டார் சையிக்கிளுக்கு மேல் விழுந்து படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுப் பிற்பகல் 3மணியளவில் மல்லாகம் சந்திக்கு அண்மையில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் தெல்லிப்பழை மகாஜனா கல்லூரியில் உயர்தரப் பிரிவில் கல்வி பயிலும் சிறீதரன் பாலகிருஷ்ணன் (வயது18) என்பவரே படுகாயமடைந்துவராவார்.

இன்று சுன்னாகம் ஸ்கந்தவரோதய

(02ம் பக்கம் பார்க்க)

பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் செய்தியாளர் மாநாட்டில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

திருகோணமலையில் எண்ணெய்த் தாங்கிகளை இந்திய அரசிடம் குத்தகைக்குக் கையளிப்பதற்கு விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை

தமாகவும் பொறுப்புக்கூற வேண்டிய கடப்பாடு அரசுக்கே உண்டு என்று கூறிய அவர்;

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கை மறுசீரமைக்க வேண்டுமென நிலவிவந்த

துணர்வு உடன்படிக்கையில் சுதந்தரமான கடற்போக்குவரத்துத் தொடர்பாக போதிய தெளிவின்மை காணப்படுவதால் அதனை மீளாய்வுசெய்ய வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ அண்மையில்

(08ம் பக்கம் பார்க்க)

# சுயாதீன ஆணைக்குழு விசாரணை தயாளன்- படைஅதிகாரிகள் வாக்குமூலம்

## இன்று இறுதி விசாரணை

(அலுவலக நிருபர்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் தீவக அரசியல் பொறுப்பாளர் செம்மணன், மற்றும் உறுப்பினர் தயாளன் தாக்கப்பட்டமை தொடர்பாக விசாரணை மேற்கொண்டுவரும் சுயாதீன ஆணைக்குழுவின் விசாரணைகள் நேற்று மூன்றாவது நாளாக யாழ் செயலகத்தில் நடைபெற்றது.

சுயாதீன ஆணைக்குழுத் தலைவரும் முன்னாள் விமானப்படைத் தளபதியுமான ஏயார்மார்ஷல் ஹரி குணதிலக தலைமையில் நடைபெற்ற இவ்விசாரணையின் போது விடுதலைப்புலி உறுப்பினர் தயாளன் வாக்கு மூலமளித்தனர்.

தயாளனின் வாக்குமூலத்தை அடுத்து தீவகக் கடற்படையின் 2ம் தர அதிகாரி லியன ஆராட்சியும் தனது வாக்குமூலத்தை அளித்தார்.

தீவகத்தில் விடுதலைப்புலிகள் தாக்கப்பட்ட போது கடமையில் இருந்து தற்போது ஊர்காவற்றுறைக்கு இடமாற்றம் செய்யப்பட்ட கடற்படை கட்டளை அதிகாரி லெப்டினன்ட் கொமாண்டர் சந்திரசிறியும் நேற்றுப் பிற்பகல் தமது வாக்கு மூலத்தை அளித்தனர்.

நேற்றைய விசாரணைகளின் போது

(02ம் பக்கம் பார்க்க)

# கொழும்புத்துறை ஜே– 61இல் மீளக்குடியமர அனுமதி மறுப்பு

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகள் மற்றும் அப்பகுதிப் பொது அமைப்புப் பிரதிநிதிகள் அடங்கிய குழுவினர் நேற்று 512வது படையணியின் உயர் அதிகாரிகளைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

கொழும்புத்துறை பகுதியில் மீளக் குடியமர்வது தொடர்பாக பொது அமைப்புப் பிரதிநிதிகள் படைஅதிகாரிகளுக்கு தமது நிலைமையை விளக்கிக் கூறினர்.

ஜே- 61, ஜே- 62 ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளின் மீளக்குடியமர அனுமதிக்குமாறும் அதன் மூலம் இயல்பு நிலை தொழில் முயற்சிகளிலும் ஈடுபடமுடியும் என்றும் பொது அமைப்புப் பிரதிநிதிகள்

(02ம் பக்கம் பார்க்க)

# சமாதானம் ஏற்பட உதவுமாறு புஷ்ஷிடம் பிரதமர் கேட்பார்

(கொழும்பு)

அமெரிக்காவுக் விஜயம் மேற்கொள்ளும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷைச் சந்தித்து இலங்கையின் சமாதான முயற்சிக்கு ஆதரவளிக்கமாறு கோருவார் என பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அதே வேளை இலங்கையின் சமாதான முயற்சிகள் குறித்தும் யுத்தநிறுத்தப் புரிந்துணர்வு உடன்படிக்கை குறித்தும் அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொலின் பவல் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் கொற்றாலிஷா றைஷ் ஆகியோருடன் பிரதமர் ரணில் பேச்சு நடத்துவதுடன் சர்வதேச நாணய நிதியம், உலகவங்கிப் பிரதிநிதிகள் ஆகியோரையும் சந்தித்துப் பேசவுள்ளார் என அமைச்சர் பீரிஸ் தெரிவித்துள்ளார். (த)

## கொழும்பிலிருந்து வந்த மினிபஸ் பளையில் விபத்து

### சாரதி படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்தை நோக்கிய வந்து கொண்டிருந்த மினிபஸ் பளை இயக்கச்சியில் விபத்துக்குள்ளானதில் மினிபஸ் சாரதி படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று இடம்பெற்ற இச்விபத்துச் சம்பவத்தில் சாவகச்சேரி சங்கத்தானையைச் சேர்ந்த விஸ்வலிங்கம் சுந்தரலிங்கம் (வயது41) என்ற மினி சாரதியே காயமடைந்தவராவார்.

(02ம் பக்கம் பார்க்க)

## சுயாதீனக் குழு வேலணை விஜயம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் தீவக அரசியல் துறைப்பொறுப்பாளர் செம்மணன், அரசியல் குழு உறுப்பினர் தயாளன் ஆகியோர் தாக்கப்பட்ட சம்பவம் நடைபெற்ற இடததை சுயாதீன ஆணைக்குழுவினர் வேலணைக்குச் சென்று பார்வையிட்டனர்.

ஆணைக்குழுத் தலைவர் ஹரி குணதிலக ஏ.பி.சமரசில்வா, சி.வி.கே. சிவஞானம், நாவல்ல கலுவெல ஆகியோர் சம்பவ இடத்தைப் பார்வையிட்டனர். (ம)

## சுயாதீன ஆணைக்

ஆணைக்குழுவின் அங்கத்தவர்களான இளைப்பாறிய நீதிபதி ஏ. பி. சமரசிங்கா, விடுதலைப் புலிகளின் சார்பு அங்கத்தவர் சி வி கே. சிவஞானம் ஆணைக்குழுவினர் செயலாளர் நாவலக்ககலுவெல ஆகியோர் சமுகமளித்திருந்தனர்

ஆணைக்குழுவின் இறுதி நாள் விசாரணை இன்று நடைபெறவிருப்பதாகவும் சாட்சியமளிக்க விரும்புவோர் இன்று சாட்சியமளிக்க வரலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இன்றுடன் முடிவடையவுள்ள இவ்விசாரணையை அடுத்து இவ்விசாரணைக்குழு நாளைகொழும்பு சென்று அங்கு தனது விசாரணைகளை மேற்கொண்ட பின் 26ஆம் திகதி இறுதிஅறிக்கையை சமர்ப்பிக்கவிருப்பதாகவும் ஆணைக்குழுவினர்தெரிவித்துள்ளனர். (வ- 6)

## இந்திய

நாராயணன் லஷ்மிசெகாலை மற்றும் மாநிலங்கள் அவைத் தலைவர்கள் எனப்பலரும் கலாமுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

எதிர்வரும் 24ந்திகதியுடன் இன்றைய குடியரசுத்தலைவர் கே.ஆர்.நாராயணனின் பதவிக்காலம் நிறைவுபெறுகிறது.

இதனை முன்னிட்டு அவருக்கு அன்றைதினம் ராஸ்ரபவனில் பிரிவுபசாரநிகழ்வு இடம்பெறவுள்ளது.

இதேவேளை அப்துல்கலாம் 12வது குடியரசுத்தலைவராக எதிர்வரும் 25ந்திகதி பதவிப்பிரமாணம் செய்துகொள்வார்.

வறியகுடும்பத்தில் பிறந்து இந்தியாவின் பிரபல அணு விஞ்ஞானியாகிஅறிவியலால் உயர்ந்த அப்துல்கலாம் இந்தியகுடியரசுத் தலைவர்பதவியை அலங்கரிப்பது பாரதத்திற்கு நன்மை சேர்க்குமென்று ஆய்வாளர்கள் கருத்துவெளியிட்டுள்ளனர். (இ)

# மகளிர் முன்னேற்ற உத்தியோகத்தர்

# நேர்முகத் தேர்வுக்கு 262 பேருக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

மகளிர் விவகார அமைச்சினால் மகளிர் முன்னேற்ற உத்தியோகத்தர் ஆட்சேர்ப்புக்கான நேர்முகத்தேர்வு இம்மாதம் 26, 27ஆம் திகதிகளில் யாழ். செயலகத்தில் நடாத்தப்படவுள்ளது.

மேற்படி நேர்முகத்தேர்வுக்கு 262பேர் அழைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 26ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்பட்டுள்ளவர்களின் பெயர் விபரம் நேற்று வெளியாகியது.

அன்றையதினம் பி.ப 1மணிக்கு நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்பட்டோர் விபரம்.

செ. அபனா கோப்பாய், சீ. அன்பரசி அல்வாய், த.தர்மினி சாவகச்சேரி, சி. வதனா சாவகச்சேரி, பா.மார்க்கண்டு கரவெட்டி, சி. கலாரஞ்சினி யாழ்ப்பாணம், த. தர்மினி கொழும்பு- 4, க கஜந்தினி கொட்டடி, நி. இந்துமதி கொக்குவில் வீ ஜீவாநந்தினி மிருசுவில், மா.சிவகலாராணி காங்கேசன்துறை, வ. வசந்தமாலா யாழ்ப்பாணம், ப. சசிகலாயாழ்ப்பாணம், ம.விமலரஞ்சினி கொடிகாமம், க. கமலினி சாவகச்சேரி, ஐ. விஜயலதா சுன்னாகம், பா. நிலானி சஙகானை, சி. கோமளவதி கைதடி, சி. ரஜீதா சாவகச்சேரி, ந. சுகல்யா சாவகச்சேரி, தி. சுபாஜினி வல்வெட்டித்துறை, ம. சத்தியவாணி சுன்னாகம், கு. ஆனந்தரூபி ஒட்டுமடம், ர. ஜெயசுதா கோப்பாய், த. தயாநந்தினி நல்லூர்வடக்கு, த.புனிதசீலி மண்டைதீவு, சி. மதிவதனி கொக்குவில், த. தர்சினி நல்லூர் வடக்கு ச.சுதாஜினி இணுவில், ச. செல்வராணி இணுவில், அ. மோகனமாலா ஆனைக்கோட்டை, சு. ஜெயந்தி வண்ணார்பண்ணை வி அனுஷாஜெரகின் பாசையூர், க. சுபாஜினி தெல்லிப்பளை, கு. தர்மினி புத்தூர், த. சுகந்தினி யாழ்ப்பாணம், செ சிவநந்தினி சுன்னாகம்,

27 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்பட்டோர் விபரம்,

ந.கௌரீஸ்வரி இணுவில், மு.நகுலேஸ்வரி கொடிகாமம், இ.சுனிதா மஞ்சத்தடி, ந.சுபாதினி திருநெல்வேலி, ச.ஜானகி அரியாலை, க.ஆனந்தபவானி தாழையடி, கி.சசிகலா காங்கேசன்துறை, கி.யோகேஸ்வரி அளவெட்டி, சி.யசோதா கோண்டாவில், இ.குகாநந்தி மானிப்பாய், அ.ஆன் லுமினா வசந்தகுமாரி பண்டத்தரிப்பு, உ.ரூபா யாழ்ப்பாணம், சு.மனேபவானி வறணி, இ. வாசுகி மானிப்பாய், வே.உதயகுமாரி கொடிகாமம், ஆ.வெனிசுயா மட்டக்களப்பு, சு அழகுராணி மானிப்பாய், சி.புனிதாநிதி கொடிகாமம், நா. தாமரைச்செல்வி கொக்குவில், பா.சுதர்சினி கொக்குவில், பி.சிறிதா கரவெட்டி, செ.செல்வராணி சுன்னாகம், ச.பிறேமினி சாவகச்சேரி, ந.சுஜி கரவெட்டி, பி.சுதர்ஜினி அளவெட்டி,

(தொடரும்)

## கொழும்புத்துறை

படைஅதிகாரிகளுக்கு எடுத்துக் கூறினார்

அத்துடன் மேற்படி கிராம சேவகர் பிரிவுகளில் மீளக்குடியமர்வதற்கு அனுமதிமறுக்கப்படின் எதிர்வரும்ஓகஸ்ட் மாதம் முதலாம்திகதி தொடக்கம் மறியல்போராட்டத்தில் ஈடுபடுவோமென்று எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இதையடுத்து கருத்துக் கூறிய படையதிகாரிகள் கொழும்புத்துறையில் ஜே61 கிராமசேவகர்பிரிவு உயர் பாதுகாப்பு இராணுவப்பிரதேசமாக இருப்பதனால் அங்கு மக்களை மீளக்குடியமர அனுமதிக்க முடியாதென்று கூறினார்.

ஆனால் படையினர்ஜே-62 சிராமசேவகர் பிரிவிலிருந்து வெளியேறிய தையடுத்து, பொதுமக்கள் அங்கு குடியமர முடியுமென்று உறுதியளித்தார்.

இதேவேளை இப்பகுதியில் மக்கள் மீளக் குடியமர்வது தொடர்பாக ஆராய்வதற்கு, எதிர்வரும் 21ஆந்திகதிகாலை 9மணிக்கு யாழ். இலந்தைக்குளம் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் ஜே- 61, 62 பிரிவு மக்களை கலந்துகொள்ளுமாறுஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (இ- 6)

## கொழும்பிலிருந்து

எதிரே வந்த பாரியவாகனமொன்றுக்கு இடம்விட்டுக் கொடுக்கும் வகையில் வாகனத்தைத் திருப்பியபோது மரமொன்றுடன் மோதி விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப் படுகிறது.

எனினும் சாரதியின் சாதுரியத்தினால் பயணிகள் எவரும் காயமடையவில்லை என்பதும் இங்குகுறிப்பிடத்தக்கது. (இ - 6)

## லொறிக்கு

கல்லூரிக்கும், தெல்லிப்பழை மகாஜனா கல்லூரிக்கும் இடையில் நடைபெறவுள்ள கிறிக்கெற் மோதலுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையிலும் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் முகமாகவும் இரு கல்லூரி மாணவர்களும் நேற்று வீதிகள், சந்திகளில் பறை அடித்து ஆடிப்பாடினர்.

இவ்வகையில் மகிழ்ச்சி ஆரவாரத்தில் ஈடுபட்ட மகாஜனாக்கல்லூரி மாணவஅணியினரே லொறில்சென்று கொண்டிருந்த போது மேற்படி விபத்து இடம்பெற்று பிரஸ்தாப மாணவன்படுகாயமடைந்துள்ளார். (இ-12,6)

## யாழ். மாநகரசபை சுகாதார பரிசோதகர்களுக்கு சீருடை வழங்க தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபையின் மாதாந்தக் கூட்டம் நேற்று இரண்டாவது நாளாகமாநகர முதல்வர் செ. சந்தையன் தலைமையில் நல்லூர் இந்து விடுதியில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு,

★ பாதுகாப்பு உத்தியோகத்தர்களை இனங்காணக் கூடிய முறையில் சீருடை வழங்கி தமது கடமைகளைச் சீராகச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்

★ சுகாதாரப் பரிசோதகர்களுக்கு சீருடை வழங்க நடவடிக்கை எடுத்தல்

★ மாநகரசபையில் உள்ள அனைத்து வெற்றிடங்களுக்கும் உடனடியாக உளளகப்பதவி உயர்வு வழங்கல்

★ தென்னிலங்கையிலிருந்து வரும் மக்களுக்கு மலசலகூடம் மற்றும் குடிதண்ணீர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்

மேலும்பொம்மைவெளிமக்களின் பயன்பாட்டுக்காக மராமத்துக் குழுத் தலைவரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினருமான கிங்ஸ்லி கணேசன் இரு நீர்த்தாங்கிகளைத் தனது நிதியில்இருந்து பெற்றுக் கொடுத்ததாகவும் இக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (ஷ- 2)

## பலன்தரும் தேவார பதிகங்கள்

சைவசமய குரவர்களால் பாடப்பெற்ற பலதேவார பதிகங்களை பலர் தினமும் பாராயணம் செய்து பலன்பெறுகிறார்கள் அவற்றுள் ஒன்றை கீழே தருகிறோம்.

### சிவபுண்ணியம் பெறவும்
### தீவினைகள் நீங்கவும்
### பாராயணம் செய்யவேண்டிய பதிகம்

இப்பதிகம் பஞ்சாக்கரத் திருப்பதிகம் எனப்படும். ஆதிமந்திரமாய் விளங்குகின்ற திருஐந்தெழுத்தின் மேன்மைகளை எவ்லாம் சம்பந்தப் பெருமான் இப்பதிகத்தில் அருளிச் செய்துள்ளார். ஆன்மா கடைத்தேறும்பொருட்டு இப்பதிகத்தை அனுதினமும் பாராயணம் செய்தல்வேண்டும்.இதனால் தீவினைகள்யாவும் நீங்கி, சிவபுண்ணியம் மேலோங்கும். இரத்தஅழுத்தநோய் போன்றவை குணமாகும். வாழ்நாள் நீடிக்கும். மனக்கவலைகள் அழிந்தொழியும்.

### மூன்றாம் திருமுறை

பஞ்சாக்கரத் திருப்பதிகம் பண்: காந்தார பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

துஞ்சலும் துஞ்சல் இலாதபோழ்தினும்
நெஞ்சகம் நைந்துநினைமின் நாள்தொறும்
வஞ்சகம் அற்று அடிவாழ்த்த கூற்று
அஞ்ச உதைத்தன அஞ்செழுத்துமே

மந்திர நான்மறை ஆகிவானவர்
சிந்தையுள் நின்றவர் தம்மைஆள்வன
செந்தழல் ஓம்பியசெம்மை வேதியர்க்கு
அந்தியுள் மந்திரம் அஞ்செழுத்துமே

ஊனில் உயிர்ப்பை ஒடுக்கி ஒண்சுடர்
ஞான விளக்கினை ஏற்றி நன்புலத்
தேனை வழிதிறந்து ஏத்துவார்க்கு இடர்
ஆன கெடுப்பன அஞ்செழுத்துமே

நல்லவர் தீயர் எனாது நச்சினர்
செல்லல் கெடச் சிவமுத்திகாட்டுவ
கொல்ல நமன்தமர் கொண்டு போமிடத்து
அல்லல் கெடுப்பன அஞ்செழுத்துமே

கொங்கு அலர் மன்மதன் வாளி ஐந்து அகத்து
அங்குள பூதம் அஞ்ச ஐம்பொழில்
தங்கு அரவின் படம் அஞ்சும் தம்முடை
அங்கையில் ஐவிரல் அஞ்செழுத்துமே

தும்மல் இருமல் தொடர்ந்த போழ்தினும்
வெம்மை நரகம் விளைந்த போழ்தினும்
இம்மை வினை அடர்த்து எய்யும் போழ்தினும்
அம்மையினும் துணை அஞ்செழுத்துமே

வீடு பிறப்பை அறுத்துமெச்சினர்
பீடை கெடுப்பன பின்னை நாள்தொறும்
மாடு கொடுப்பன மன்னு மாநடம்
ஆடி உகப்பன அஞ்செழுத்துமே

வண்டு அமர் ஓதி மடந்தை பேணின
பண்டை இராவணன் பாடி உய்ந்தன்
தொண்டர்கள் கொண்டுதுதித்தபின் அவர்க்கு
அண்டம் அளிப்பன அஞ்செழுத்துமே

திருச்சிற்றம்பலம் (5700)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகு

### அறிவித்தல்

### வெளிநிலைத் தேர்வு நாடிகளின் பதிவேடுகள்

1. கலை முதற்தேர்வு கல்வியாண்டு - 2000/2001
2. வணிக முதற்தேர்வு கல்வியாண்டு -2000/2001
3. கலைமாணி பகுதி-1கல்வியாண்டு -2000/2001
4. நுண்கலைமாணி 1,2,3,4ம் வருடம் (சங்கீதம்/ நாட்டியம்) 1999/2000

மேற்படி கற்கைநெறிகளுக்கு வெளிநிலைத் தேர்வு நாடிகளாக பதிவுசெய்தவர்கள் தங்களுக்குரிய பதிவேட்டினை 19.07.2002 வெள்ளிக்கிழமை முதல் வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பு;-பிறப்புச் சான்றிதழினதும் கல்விச்சான்றிதழினதும் மூலப்பிரதிகளை இதுவரைசமர்ப்பிக்காதவர்கள் தயவுசெய்து கொண்டுவரவும்.

பதிவாளர்
யாழ் பல்கலைக்கழகம்

(கி-4676)

# இராசி பலன்

(19 - 07 - 2002)
ஆடி 3, வெள்ளி
தசமி மு. இ. 7.38 வரை
விசாகம் மு. இ. 8.54 வரை
ராகுகாலம் - 10.31-12.01
நல்லநேரம் - 6.01-7.31

**மேடம்**
நண்பர்கள் சந்திப்பு, திடீர் மனஸ்தாபம், நல்ல காரியம், அதிக பிரயாசை.

**இடபம்**
உடல் நலம், நல்ல செய்தி, காரிய நன்மை, தொழில் நன்மை.

**மிதுனம்**
முயற்சி கைகூடும், வியாபார நன்மை, தாழ்ந்த சுபாவம், சத்துரு ஜெயம்.

**கடகம்**
நிலைக்கேடு, தாய்வழி உறவு, காரிய தாமதம், கடுமையான பிரயாசை.

**சிங்கம்**
இனிய அனுபவம், போசன சுகம், அறிஞர்கள் சந்திப்பு, முயற்சி கைகூடும்.

**கன்னி**
மாதர் நட்பு, இலட்சுமிகரம், பொருள் விரயம், முயற்சி தாமதம்.

**துலாம்**
தெய்வ தரிசனம், காரியம் கைகூடும், கற்பனை மிகுதி, சயன சுகம்.

**விருச்சிகம்**
காரிய தாமதம், சயன சுகக் குறைவு, பிரயாணம், உறவினர் சந்திப்பு.

**தனுசு**
கௌரவம், குடும்ப சுகம், முயற்சி பலிதம், மேன்மை.

**மகரம்**
அதிக பிரயாசை, பிறர் உதவி, அதிகாரம், காரியம் கைகூடும்.

**கும்பம்**
மனச்சஞ்சலம், முயற்சி தாமதம், தொழில் நன்மை, ரோகம்.

**மீனம்**
வாய்த்தர்க்கம், உடல் நலக் குறைவு, காரிய தாமதம், போசன சுகம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

## வடக்கு-கிழக்கு மாகாண மட்ட 14 வயதுக்குட்பட்ட மாணவர்களின் உதைபந்தாட்ட விழா 25ல் ஆரம்பம்

(சுண்டுக்குளி)
இலங்கை உதைபந்தாட்ட சம்மேளன ஏற்பாட்டில் யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் வடக்கு-கிழக்கு மாகாண பாடசாலைகளின் 14 வயதுக்குட்பட்ட அணிகள் கலந்து கொள்ளும் உதைபந்தாட்ட விழா எதிர்வரும் 25 ஆம் திகதி தொடக்கம் 28 ஆம் திகதிவரை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்மாவட்டத்தில் இருந்து; யாழ். கல்வி வலயத்தில் இருந்து; சென். ஜோவ்ம.வி, சென். ஜோண்ஸ் கல்லூரி.

வலிகாம வலயத்தில் இருந்து; அருணோதயா கல்லூரி, யூனியன் கல்லூரி.

வடமராட்சி வலயத்தில் இருந்து, தேவரையாளிஇந்துக் கல்லூரி, நெல்லியடி ம. வி.

தென்மராட்சி வலயத்தில்இருந்து; மட்டுவில் ம. வி. சாவகச்சேரி இந்துக்கல்லூரி,

தீவக வலயத்தில்இருந்து சென் அன்ரனீஸ் கல்லூரி, நெடுந்தீவு மத்தியமகாவித்தியாலயம்.

மன்னார் மாவட்டத்தில் இருந்து; சென். சேவியர் கல்லூரி சென். லூசியஸ்கல்லூரி.

அம்பாறை மாவட்டத்தில் இருந்து; சம்மாந்துறைமத்திய வித்தியாலயம், பருதமுனை வித்தியாலயம் ஆகியன பங்கேற்கவுள்ளன.

தவிர திருகோணமலை மாவட்டம், மட்டக்களப்பு மாவட்டம், கிளிநொச்சி மாவட்டம் ஆகியவற்றில் இருந்தும் தலா 2 அணிகள் இவ்விழாவில் கலந்துகொள்ளவுள்ளன.

வெளிமாவட்டங்களில் இருந்து வருபவர்கள் தங்குவதற்கு சென். ஜோன்ஸ், சென். பற்றிக்ஸ் துரையப்பா விளையாட்டரங்கு ஆகிய இடங்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக போட்டி இணைப்பாளர்எஸ். கிளிபேட் அன்ரனிப்பிள்ளை தெரிவித்தார்.

அத்துடன் போட்டிகள் யாழ். துரையப்பா விளையாட்டரங்கு, சென். ஜோண்ஸ் கல்லூரி மைதானம், சென். அன்ரனீஸ் விளையாட்டு கழக மைதானம் ஆகியவற்றில் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் இறுதிப்போட்டி 28 ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை 5.00 மணிக்கு துரையப்பா விளையாட்டுஅரங்கில் நடைபெறும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (உ-110)

## சலனசித்திரத்தின் திரைப்படத் தயாரிப்பு வேலைகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)
'சலன சித்திரம் - யாழ்ப்பாணம்' திரைக்கலைச் சங்கம் தனது முதலாவது திரைப்படத்தயாரிப்பு முன் நடவடிக்கைகளில் தற்போது ஈடுபட்டுள்ளது.

சுமார் 40 வருடங்களுக்கு முன் வன்னியில் நடந்த ஒரு உண்மைச் சம்பவத்தைத் தழுவி எடுக்கப்படவுள்ள இப்படம், கணவன் - மனைவி இடையே உள்ள கருத்து முரண்பாட்டை அடிப்படைக் களமாக வைத்து சிறுவர் உரிமைத் தளத்தை முன்னிறுத்தியதாக அமையும் என்று மேற்படி சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கான நடிகர் மற்றும் தொழிற் கலைஞர் தெரிவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (ஷ)

## மத்திய மாகாணத்தைச் சேர்ந்த 40 வர்த்தகர்கள் 26 இல் யாழ் வருகின்றனர்

(யாழ்ப்பாணம்)
மத்திய மாகாண வணிகர் சம்மேளனத்தைச் சேர்ந்த 40 பேரடங்கிய வர்த்தகர்குழு ஒன்று எதிர் வரும் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமைமத்திய மாகாண கைத்தொழில் மன்றத் தலைவர் ரி.பாலசுப்பிரமணியம் தலைமையில் யாழ்ப்பாணம் வரவுள்ளது.

மூன்று நாள் விஜயம் மேற்கொண்டு இங்கு வரும் இவர்கள், யாழ். குடாநாட்டில் தமது வர்த்தகத்தை மேற்கொள்ள வழி வகைகள் செய்வதுடன்,

எதிர்வரும் ஓகஸ்ற்மாதம் 3-5 ஆம் திகதி வரை யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ள வர்த்தகக் கண்காட்சியில் தமதுஉற்பத்திப் பொருட்களைக்காட்சிப்படுத்துவது தொடர்பான முன்னேற்பாடுகளையும் மேற்கொள்ளவுள்ளனர் (உ-6)

## விசர்நாய்த் தடுப்பூசி

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில், நல்லூர் பொதுச்சுகாதார பரிசோதகரால் விசர் நாய்த்தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

எதிர்வரும் 22 ஆம் திகதி திங்கட் கிழமை திருநெல்வேலி இந்து இளைஞர் வாலிபர் சங்கம், அம்மன்வீதி காளி கோவில் ச.ச.நிலையம், பிள்ளையார் வீதி கலைச்சுடர் ச.ச.நிலையம் ஆகியவற்றில் வைத்து இத் தடுப்பூசி ஏற்றும் பணி இடம்பெறவுள்ளது. (உ-19)

## வீடியோ படக்காட்சி

(யாழ்ப்பாணம்)
யாழ். பல்கலைக் கழக புறநிலைப் படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கி வரும் திரைப்படக் காட்சித் தொடரில் சந்தோஷ் சிவன் (SANTOSH SIVAN) இயக்கிய 'அசோகா' (ASOKA) எனும் திரைப்படம் நாளை முற்பகல் 10-00 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது.

இதில் ஆர்வலர்கள் எவரும் கலந்து கொண்டு பயன் பெறலாம் என புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (ஷ)

## சிறுவர் நாடக விழா

(யாழ்ப்பாணம்)
'சிறுவர் நாடக விழா' எதிர்வரும் ஓகஸ்ற் மாதம் 3 ஆம் திகதி சனிக்கிழமை யாழ் இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது. (உ)

## மரபுவழி இசை நாடகங்கள் ஒன்பது அறிமுகவிழா

(யாழ்ப்பாணம்)
பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகச் செயலாளர் செல்லையா மெற்றாஸ்மயிலின் 'மரபுவழி இசை நாடகங்கள் ஒன்பது' நூல் அறிமுக விழா எதிர்வரும் 21 ஆம் திகதிஞாயிற்றுக்கிழமைபி.ப. 2.30 மணிக்கு வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கமண்டபத்தில் தமிழ்மணி அகளங்கன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் இ. விசாகலிங்கம் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு நூலை அறிமுகம் செய்துவைக்கவுள்ளார். (உ)

## படையினர் விட்டுச் சென்ற பொருட்களை எடுப்பதில் பொதுமக்கள் நாட்டம்

(ஊர்காவற்றுறை)
வேலணையில் கடற்படையினர் விட்டுச் சென்றமுகாமில் எஞ்சியுள்ள பொருட்களை எடுப்பதில் பொது மக்கள் பலரும் ஆர்வம் காட்டி வருகின்றனர். வேலணைமத்தியகல்லூரி மாணவர் விடுதி, வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம் ஆகியவற்றைச் சூழவுள்ள பகுதியில் இருந்து அண்மையில் கடற்படையினர் வெளியேறியமைதெரிந்ததே.

மேற்படி இடங்களில் கடற்படையினர் விட்டுச்சென்ற வாகன உதிரிப்பாகங்கள், முட்கம்பிகள் மற்றும் தளபாடங்கள் என்பனவேபொது மக்களினால் எடுக்கப்பட்டு வருகின்றதாகத் தெரியவருகின்றது.

இதன்போது பொதுமக்களால்மாணவர்விடுதி மற்றும் பாடசாலைகளுக்கு சொந்தமான பொருட்கள் சிலவும் எடுத்துச்செல்லப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது. (உ-75)

## பல பெயர்களால்

பிடத்தக்கது.

வறுமை, அடக்கம், கற்பமைந்து, தூயவாழ்க்கைக்குத் தம்மை 'அர்ப்பணம்' செய்து கொண்ட ஆண்களும், பெண்களுமான துறவிகள், தம்மை நாடிவரும் அடியவர்களுக்கு ஆன்மீக எழுச்சி தரும் சாதனைகளையும், உபதேசங்களையும், சமய ஆன்மீக நெறி நின்று அளித்து வருவதை எவ்வளவு பாராட்டினும் தகும்.

## புனித மரியாள் வித்தி. முதலிடம்

(யாழ்ப்பாணம்)
யாழ். வலய மட்ட உடற்பயிற்சிக் கண்காட்சிப் போட்டியில் 15 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் யாழ்ப்பாணம் புனித மரியாள் வித்தியாலயம் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது. (ஷ)

## அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)
மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத்தில் அங்கத்துவம் வகிக்கும் சகல பொது அமைப்புக்கள், தொழிற் சங்கங்களுக்கான அவசர கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை பி.ப.4.30 மணிக்கு கோயில் வீதியில் அமைந்திருக்கும் மனிதநேய அமைப்புகளின் ஒன்றியகாரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில்சகல மனிதநேய அமைப்புக்களதும் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோரைத் தவறாது கலந்து கொள்ளுமாறு அமைப்பின் தலைவர் த.பரமநாதன் அறிவித்துள்ளார். (உ)

## இளம் பெண்கள் கடத்தப்பட்டனர்

(கொழும்பு)
கொழும்பு கொச்சிக்கடை புதுச் செட்டித்தெருவில் வைத்து கடந்த திங்களன்று இரண்டு இளம்பெண்கள் கடத்தப்பட்டுள்ளனர்.

ஆடைத் தொழிற்சாலையில் தொழில் புரியும் மேற்படி இரு பெண்களும், வேலை முடித்து இரவு 8 மணியளவில் வீடு திரும்பிக் கொண்டிருந்த வேளையில், வாகனத்தில் வந்த இனம்தெரியாத 6 பேர் கொண்ட குழு இவர்களை கடத்தியதாகவும்,

அவர்கள் அபயக்குரல் எழுப்பியும் எவரும் உதவிக்குச் செல்லவில்லை எனவும் நேரில் கண்ட சிலர் பொலிஸில் புகார் செய்துள்ளனர். (உ)

## கால்நடையாக இலங்கையை சுற்றிவரும் தென்பகுதி வாலிபர்

கொழும்பு தென்பகுதி இளைஞர் ஒருவர் கால் நடையாக இலங்கையைச் சுற்றிவரும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

சமன் என்ற இந்த இளைஞர் கடந்த 11 ஆம் திகதி காலி முகத்திடலில் இம் முயற்சியை ஆரம்பித்துள்ளார்.

இம் மாத இறுதிப்பகுதியில் இவர் யாழ்ப்பாணத்தை வந்தடைவார் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-6)

## உலகத் தமிழர் மாநாட்டில் விநாயகமூர்த்தி

(கொழும்பு)
நாளையும் நாளைமறுதினமும் சென்னை எழும்பூர் டொன் பொஸ்கோ பாடசாலைமைதானத்தில்நடைபெறவுள்ள உலகத்தமிழர் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக யாழ்மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அ.வினாயகமூர்த்தி நேற்று சென்னை பயணமானார்.

உலகத்தமிழர் மாநாட்டு ஏற்பாட்டாளர் பழநெடுமாறன் அழைப்பைஏற்று செல்லும் அ.வினாயகமூர்த்தி எம்.பி நாளை மாநாட்டில் உரையாற்றவுள்ளார். (ம)

## ஏகப்பரம் . . . .

இன்றைய நிலை

இன்று ஆகம மரபையும், சிறப்பையும் அறியாதவர்களாகச் சைவர்கள் வாழ்கின்றார்கள். சிவனும், உமையும் விநாயகரும்முருகனும் சைவத்துக்குஉடன்பாடானபிறமூர்த்தங்களும் மட்டும் இடம்பெற வேண்டிய சைவக் கோயில்களில் பிற உருவங்கள் இடம் பெறுகின்றன. ஆகம முறைப்படி செயற்படவேண்டிய கோயில்கள் சிலதவறான வழியிற் செயற்படுகின்றன.

சைவத்தையும், ஆகம நெறியையும் பேணிப்பாதுகாத்த பெருமைசைவக்குருமாருக்கும் உண்டு. இவர்கள் சிலரின் அண்மைக் காலச் செயல்கள் சைவத்தைச் சிதைப்பதாக உள்ளன. ஈழத்திலுள்ள சைவக்குருமார் சிலர் தங்கள் பாரம்பரியத்தை மறந்து குருக்கள் பட்டம்பெறுவதற்கு சித்தாந்த சைவத்தைப் புறக்கணித்து ஆகம நெறியை ஒதுக்குகின்ற வைதீக நெறி சார்ந்த சங்கரமதத்தை நாடுகின்றனர். இந்த நிலைமலேசியாவிலும், தென்னாபிரிக்காவிலும் கூட இன்று தோன்றியுளளது. ஐயப்பசமித்தி, சாஸ்தாபீடம், ஆஞ்சநேயர் பீடம் போன்றஅமைப்புக்களைஉண்டாக்கி சைவத்திற்கும், ஆகம நெறிக்கும்புறம்பானவழிகளில் சைவர்களைத்திசை திருப்புகின்றனர் சைவ மரபில் இல்லாத ஆஞ்சநேயர் பெருமை பேசிப் புதுப்புது விளக்கங்களை அளிக்கிறார்கள். ஈழத்தில் அதுவும் நாவலர் பிறந்த மண்ணில் இன்று ஆஞ்சநேயர் கோயில் கட்டும் முயற்சி நடைபெறுகிறது சைவத்தைச் சிதைக்கும் இச்சைவக் குருமாரின் செயல்கள் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியவை. கோயில் கிரியைகளிலும் இல்லக்கிரியைகளிலும் இவர்களுக்கு இடமளித்தல் கூடாது. இவர்களின் தகாத செயல்களை உடனடியாகத் தடுத்து நிறுத்தி, சைவத்தின் பெருமையையும் ஆகமத்தின் சிறப்பையும் பேணிப் பாதுகாக்க வேண்டியது சைவ அறிஞர்கள், நிறுவனங்கள், பொது மக்கள் ஆகிய அனைவரினதும்தலையாயகடமையாகும். இதனைக் கண்டும் காணாமல் இருப்பதால்தீங்குதான் விளையும். சிவாச்சாரியார்களின் பெருமை குன்றும்.

செய்தக்க அல்ல செயக்
கெடும் செய்தக்க
செய்யாமை யானும்
கெடும்-
திருக்குறள்.

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவக கல்வி மாணிப் பாட நெறிக்கு தொழில்சார்பாடக் கூறுகள் பொதுப்பாடங்கள் ஆகியவற்றுக்கான விரிவுரையாளர்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க வேண்டிய இறுதித்தினம் இம்மாதம் 20 ஆம் திகதியாகும்.

மேலதிக விபரங்களை தேசிய கல்விநிறுவக யாழ். இந்துக்கல்லூரி நிலையத்தில் பார்வையிடமுடியும். (உ)

## பனை மரங்கள் தறிப்பு

(வட்டுக்கோட்டை)

கல்லுண்டாய் வெளிப் பகுதியில் இராணுவத்தினர் புதிய காவலரண்களை அமைத்து வருகின்றனர்.

இந் நடவடிக்கைக்காக அப் பகுதியில் பெருமளவு பனை மரங்கள் தறிக்கப்படுவதாகவும் தெரியவருகின்றது (உ-216)

## குற்றப்பணம் அறவீடு

சட்டவிரோதமாகக் கசிப்பு விற்பனை செய்தகுற்றச்சாட்டின் பேரில் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட இருவரிடமிருந்து தலா 20 ஆயிரம் ரூபா குற்றப்பணமும், 4 ஆயிரம் ரூபா தர்மப் பணமும் அறவிடுமாறு நீதிவான் இ. த. விக்னராஜா உத்தரவிட்டதுடன்,

இருவரையும் 30 ஆயிரம் ரூபா ஆட்பிணையில் செல்லவும் நீதிவான் உத்தரவிட்டார். (ஷ-6)

# பல பெயர்களால் வழங்கும் கடவுட் சமுதாயம்

# வேல்ஸ் நகரிலே நான் கண்டவை அற்புதம்

என்றுமே நினையாத ஒன்று நல்லை முருகப் பெருமானின் அருளினால் முன்வந்து நின்று சிலகாலம் லண்டனில் வதியச் செய்துள்ளது. லண்டனிலிருந்து சுமார் நானூறு கிலோமீற்றர் தொலைவில் உள்ள வேல்ஸ் நகரத்தில்1973 தொடக்கம் நிறுவப்பட்டு மிகச் சிறப்பாக நடத்தப்பட்டு வரும் சுப்பிரமணியர் ஆலயத்திற்கு என் மகன் அழைத்துச் சென்றார். பெண்கள், ஆண்கள், குழந்தைகள் உட்பட எண்மர் கொண்ட குழுவில் நானும் ஒருவனாய் அங்கு சென்றேன்.

சாலையின்செப்பமும், இருபுறமும் கண்ணைக் கவரும் பசுமையும், சற்றே குளிருடன் கூடிய இதமான வெப்பமும் நானூறு கிலோமீற்றர் பயணத்தை மிகவும் இனிதாக்கின 3 மணித்தியாலப் பயணம்.

வேல்ஸ் ஆலயம்

வேல்ஸை அடைந்து திடீரென்று மிக ஒடுங்கியதும்,ஒரு வாகனமே செல்லக்கூடியதும் பள்ளம் மேடுகளுடன் கூடியதுமான பாதையிலே எமது ஊர்தி செல்லத் தொடங்கியது. இருபக்கமும் அடர்த்தியான மரங்களோடு கூடிய காடு, பகலையும் இரவாக்கியது. மலையகப் பயணம் செல்வது போன்ற உணர்ச்சி உண்டாயிற்று, கோயிலை அடைந்த பொழுது கதிர்காமத்துக்கு வந்து விட்டோமோ என்ற உணர்ச்சி தான் உண்டாயிற்று.

சுப்பிரமணியர் ஆலயத்துள் நுழைகின்றோம். சிறிய ஆலயந் தான், ஆனால் தீபங்களால்பிரிக்கப்பட்டுஆண்களும் பெண்களும் இரு பிரிவுகளாய்ப் பிரிந்திருந்தார்கள், ஆலயத்திற்கே உரிய புனித அமைதி, ஆங்கிலேயர், இலங்கைத் தமிழர், வட இந்தியர் முதலாகப் பல இன அடியார்கள் அமர்ந்து தியானத்தில் ஈடுபட்டிருந்தார்கள்.

ஆங்கிலேயத் துறவிகள்

சரியாகப் பிற்பகல் 1.30 மணிக்குப் பூசை தொடங்கியது ஆங்கிலேயத் துறவிகளே சமஸ்கிருத மொழிகளிலே உச்சரிப்பு சத்தத்துடன் கூட்டாகப் பூசைக்கான மந்திரங்களை ஓத, தலைமைத் துறவி அவரும் ஆங்கிலேயரே) தீபாராதனை நிகழ்த்தினார். தொடர்ந்து கூட்டுப் பிரார்த்தனைவிநாயகர், முருகன், சிவன், நாராயணன் ஆகிய மூர்த்திகளுக்கானதுதிப் பாடல்கள்சமஸ்கிருதம்,தமிழ் இரண்டும் கலந்தவை பக்க வாத்தியங்களுடன் இசைக்கப்பட்ட பொழுது உண்மையில் மெய் சிலிர்த்தது. மனம் அடங்கி இறைவனோடு சங்கமமாவது போன்ற தோர் உணர்ச்சி அங்குக் கூடியிருந்தவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் என்பதற்கு ஐயம் இல்லை. தொடர்ந்து காஷாயச்சட்டையும் (National) வேட்டியும் அணிந்த துறவிகள் மூவர் ஆங்கிலேயர்) மிகவும் அன்போடு புன்னகை மாறா முகத்தினராய், வரிசையாகச் சென்ற அடியார்களுக்குப் பிரசாதம் (விபூதி, குங்குமம், சந்தனம், பஞ்சாமிர்தம்) வழங்கினர். அடுத்து அடியார்கள் அனைவர்க்கும் அறுசுவையுண்டி வழங்கப்பட்டது. இவ்வழக்கம் இங்குள்ள எல்லா ஆலயங்களுக்கும் பொதுவானது.

ஒவ்வொருதுறையிலும் அறிவியல் புகுந்துவாழ்க்கையினை எந்திரமயமாக்கும் இந்தயுகத்திலே, அறிவியலின் உச்சத்திலே திகழ்வதும், ஜனநாயகத்தின்தாயகமாய்,தனிமனித சுதந்திரத்தைப் பேணிவருவதுமான பழம் பெரும்நாடாகிய இங்கிலாந்திலே, இத்தகைய தொரு ஆன்மீகம் நிலவுவது;

வியப்பிலும் வியப்பாகவே எனக்குத் தோற்றியது. நல்லூர்க்கந்தசுவாமி கோயிலின் மகோற்சவகாலத்தில், எனக்கு ஏற்பட்ட பத்தி அனுபவத்தினைத் தாயகத்தின் சைவப் பெருமக்களோடு பகிர்ந்து கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

### கலாநிதி க. சொக்கலிங்கம்

(சொக்கன்)

துறவகம்

1973 இல் பலபெயர் கொண்ட கடவுளர் மையமாக (Monastic Centre) துறவகமாக வேல்ஸ்சில் நிறுவப்பட்டுள்ளதும்,103 ஏக்கர் பரப்பளவு கொண்ட நிலத்தில் அமைந்ததும்,சுப்பிரமணியர், மகாசக்தி, அரங்கநாதர் ஆகியோர்க்கென அமைக்கப்பட்ட மூன்று கோயில்களைக் கொண்டதுமான இது, இவ்வாறு விரிவடையமுன் லண்டனிலே சிறிய அளவில் 1950 இல் தொடங்கப் பெற்றது என்று அறிந்தேன். அறங்காவலர் குழு ஒன்று இத்துறவக நிறுவனத்தைத் திறம்பட நிருவகித்து வருகின்றது. இதன்தாபகரும் இயக்குநரும் ஸ்ரீசுப்பிரமணியம் என்ற நாமத்தைக் கொண்ட சிங்கள இனத்தினர் என்பது குறிப்

(3-ம் பக்கம் பார்க்க)

## கொழும்பு பாடசாலை கிரிக்கெட் அணி யாழ்ப்பாணம் வருகிறது

(யாழ்ப்பாணம்)

கொழும்பு தர்ஸ்டன் வித்தியாலய கிரிக்கெட் குழு அடுத்த மாதம் 10 ஆம் திகதி யாழ்ப்பாணம் வரவுள்ளது.

எதிர்வரும் 12, 13 ஆம் திகதிகளில் இக் கிரிக்கெட் குழுவினர் யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி கிரிக்கெட் அணியுடன் மோதவுள்ளனர்.

வடக்கு. தெற்கு சகோதரத்துவத்தைக் கட்டியெழுப்பும் நோக்குடன் இப்பயணம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

குடா நாட்டில் இருந்த போர்ச் சூழ்நிலைகளால் கடந்த இரு தசாப்தங்களாக இவ்வாறான தென்னிலங்கை பாடசாலை அணிகளின் வருகை தடைப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஷ)

## இளைஞர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த வேளை கட்டாக்காலி மாடு மோதியதில் படுகாயமடைந்த இளைஞர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

கல்லுண்டாய் வெளியில் இடம்பெற்ற இந்தச்சம்வத்தில் பண்டத்தரிப்பைச் சேர்ந்த ஞா.சைலன் (வயது 18 )என்பவரே படுகாயமடைந்துள்ளார். (உ-6)

## தமிழ் மொழித் தின மாவட்ட மட்டப் போட்டி

### இரு தினங்கள் இந்து மகளிர் கல்லூரியில்

(யாழ்ப்பாணம்)

மாவட்ட மட்ட தமிழ் மொழித் தினப் போட்டிகள் இம்மாதம் 20, 26 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளன.

இந்தவகையில் தனிநிகழ்ச்சிகள் மற்றும் கூத்து வகைகளுக்கான போட்டிகள் நாளை சனிக்கிழமையும்,

ஏனைய குழுப் போட்டிகள் எதிர்வரும் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

இதேவேளை, தமிழ் மொழித் தின மாகாண மற்றும் மாவட்ட மட்ட எழுத்தாக்கப் போட்டிகள் எதிர் வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி வியாழக்கிழமை வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் இடம்பெறவுள்ளன. (உ)

## ஸ்ரீ.சு.க. மறுசீரமைப்புக்கு பௌஸி முழு ஆதரவு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினை மறுசீரமைப்புச் செய்யும்நடவடிக்கைகளுக்குஎதிர்க் கட்சித் தலைவர் மகிந்தராஜ பக்ஷாவுக்கு தான் ஆதரவு வழங்கப் போவதாகக் கொழும்பு மாவடடப் பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம் பௌஸி தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மீண்டும் சீர்குலைக்கும் முயற்சிகளில் அனுரா பண்டாரநாயக்க ஈடுபட்டு வருகிறார் எனவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

கட்சியின் அனைத்துச் செயற்பாடுகளிலிருந்தும் தன்னை விலக்கிக் கொள்ளப் போவதாக அனுராபண்டாரநாயக்கா அண்மையில் வெளியிட்ட அறிக்கைக்கு எதிராக இவர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

தன்னை வெளியேற்றினால் கட்சியில் முஸ்லிம் பிரதிநிதித்துவம் இல்லாமல் போய்விடும் எனவும், இது தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று தனக்கு ஆதரவாக இருந்து வருகிறது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (உ-8)

## உடன் இயங்க சாத்தியமில்லை

(ஊர்காவற்றுறை)

வேலணை சைவப்பிரகாச வித்தியாலயத்தை மீள இயக்குவது உடனடிச் சாத்தியமில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி பாடசாலையில் நிலைகொண்டிருந்த படையினர் அண்மையில் வெளியேறிய போதிலும், வகுப்பறைக் கட்டடங்கள் மிகுந்த சேதமடைந்தும், தளபாடங்கள் அனைத்தும் காணாமல் போயிருப்பதை அடுத்துமே உடன் இயங்கக்கூடிய சூழ்நிலை இல்லாதிருப்பதாக அறியப்படுகிறது. (உ-75)

## நியமனம் கிடைக்காத பட்டதாரி ஆசிரியர்களை பதிவு செய்ய கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

பட்டதாரி ஆசிரியர் விண்ணப்பம் கோரப்பட்ட போது விண்ணப்பித்து, நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமளித்தும் ஆசிரிய நியமனம் கிடைக்காத கீழ்வரும் திகதிகளுக்கு முன்னர் பட்டங்களைப் பெற்றுக் கொண்டவர்களைபெயர் விபரம் மற்றும் நேர்முகப் பரீட்சைக் கடிதம் ஆகியவற்றுடன் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு சங்க அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு யாழ் மாவட்ட வேலைறற்யபட்டதாரிகள் சங்கத் தலைவர் கேட்டுள்ளார்.

கலை-28 12. 1999, நுண்கலை-28.10.1999, விஞ்ஞானம் - 30.11.1999, வணிக முகாமைத்துவம்கணக்கியல்-30.06.1998.

1998 உம் அதற்கு முன்னரும் பட்டம் பெற்ற எச்.என்.டி.ஏ. பட்டதாரிகளுக்கு நியமனக் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் டிசம்பர் மாதம் ஒரு தொகுதி பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்க உறுதியளிக்கப்பட்டுள்ளதாகவும் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஷ)

# அரசியல் குற்றச்சாட்டுப் பிரேரணையை எதிர்கொள்ள தயாராகிறார் ஜனாதிபதி

(கொழும்பு)

ஐ.தே.மு. அரசாங்கம் தனக்கெதிராககொண்டு வரத் திட்டமிட்டிருக்கும் அரசியற் குற்றச்சாட்டுப் பிரேரணையை எதிர் கொள்வதற்கு ஜனாதிபதி குமாரதுங்க தன்னை தயார் செய்து வருகிறார்.

இந்த வகையில், அரசாங்கத்துடன் நேரடியாக மோதுவதற்குரிய பல நடவடிக்கைகளை அவர் எடுத்துள்ளதுடன் பொ.ஐ மு.எம்.பி.க்களுக்கு இப்பொழுது உருவாகிவரும் நெருக்கடிகள் பற்றி எடுத்து விளக்குமாறும் எம்.பிக்கள் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ளக் கூடாதென்று தடுக்குமாறும் பொ.ஐ.மு. வின் பொதுச் செயலாளர் டீ.எம்.ஜயரத்னவுக்கும்எதிர்க்கட்சித்தலைவர் மகிந்தராஜபக்ஷாவுக்கும் உத்தரவுகளை விடுத்துள்ளதாக தெரிய வருகிறது.

ஏற்கனவே வெளிநாடுகளுக்குச் சென்றுள்ள எம்.பி.க்கள் உடனடியாக நாடு திரும்புமாறும் கேட்கப்பட்டுளளனர்.

அரசியற் குற்றச்சாட்டுப் பிரேரணையும் வேறும் பல பிரேரணைகளும் திருத்தங்களுக்காக இப்பொழுது சட்டமா அதிபரிடம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை தெரிந்ததே.

இதேவேளை எதிர்க்கட்சியினால் அமைச்சர்கள் ஜோன் அமரதுங்கவுக்கும், ரவி கருணாநாயக்கவுக்கும் எதிராக கொண்டு வரப்படவுள்ள நம்பிக்கையில்லா பிரேரணை மீதும் அவசர திருத்தங்கள் செய்யப்பட்டு வருகின்றன.

அரசாங்கத்தின் பணத்தை முறைகேடாக பயன்படுத்தி ஆடம்பரக் கார்களை 2469 மில்லியன் செலவில் இறக்குமதி செய்யப்பட்டமை தொடர்பாகவே அரசியற் குற்றச்சாட்டு பிரேரணை கொண்டு வரப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ)

## நூல்கள் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். வணிகர்கழக அலுவலகத்தில்விரைவில்ஆரம்பிக்கப் படவுள்ளநூல் நிலையத்திற்கு வேண்டிய கணிசமான நூல்களை அன்பளிப்பாக வழங்க இந்திய வர்த்தக நிறுவனம் ஒன்றும்பிரித்தானியத்தூதரகமும் முன்வந்துள்ளன. (உ'6)

# இன்று ஒரு தகவல்

## தெட்சணாயனத்தின் ஆரம்பமா ஆடிப்பிறப்பு?

தமிழர்கள் வாழ்வில் தைப்பொங்கல் போன்றே ஆடிப்பிறப்பும் முக்கியத்துவம் வாய்ந்த பண்டிகை. சூரியனின் கடகராசிப் பிரவேசத்தன்று ஆடிப்பிறப்புக் கொண்டாடப்படுகிறது. தேவர்களுக்குச் சூரிய அஸ்தமனமாகும் நேரம் ஆடிப்பிறப்பு ஆகும். இதன் பின்னர் ஆறு மாதங்கள் கழித்து தைப்பொங்கல் பண்டிகையின் போது சூரியன் உதயமாகும்.

இத்தினம் தெட்சணாயன புண்ணிய காலத்தின் ஆரம்ப காலம் என தொன்றுதொட்டு வழங்கப்பட்டு வருகிறது. தெட்சணாயனத்தின் ஆரம்பம் என்பது சூரியனின் தென்திசை நகர்வுக் காலத்தைக் குறிக்கும் பொருளில் அமைந்துள்ளது. ஆனால் தற்போதைய இயற்கையில் ஆனி 7 ஆம் திகதியே தென்திசை நகர்வின் ஆரம்பகாலமாக உள்ளது. 2002 இல் இத்தினம் ஜூன் 21 ஆம் திகதியாகும். அன்று சூரியன் கடகக்கோட்டுக்கு உச்சம் கொடுத்துவிட்டு பின்னர் தென்திசை நோக்கி தனது நகர்வை ஆரம்பித்து விட்டது.

இந்த விடயம் பஞ்சாங்கம் கணிப்பவர்களுக்கும், வானியல் அறிஞர்களுக்கும் நன்கு தெரிந்த ஒன்றேயாகும். ஆனால் இப்போதும் ஆடிப்பிறப்பே தெட்சணாயனத்தின் ஆரம்பம் என கொண்டாடப்பட்டு வருகிறது. இதற்குக் காரணம் பஞ்சாங்கம் கணிக்கப்பட்ட காலத்தில் இருந்த நிலையில் ஆடிப்பிறப்பும் தெட்சணாயனமும் ஒன்றாக அமைந்திருந்தமையே. பெரியவர்களான முனிவர்களின் கருத்துக்கு மதிப்பளித்து அவர்கள் தந்த வாக்கியங்களைப் போற்றியே அந்த நடைமுறை இன்றும் கைக்கொள்ளப்பட்டு வருகிறது, எனினும் விஞ்ஞான ரீதியாக சூரிய சந்திரர்களின் நகர்வுகளைக் கற்கும் மாணவர்களுக்கு மேற்குறித்த உண்மை தெரியப்படுத்தப்பட வேண்டும்.

இதேபோன்றே தைப்பொங்கலை உத்தராயணம் என நாம் குறிப்பிட்டாலும் சூரியனின் மகரக்கோட்டு உச்சநாள் மார்கழி 7 இல் (டிசெம்பர் 22) நிகழ்வதையும் மாணவர்கள் அறிந்திருக்க வேண்டும்.

சி. ஜெயகணேஷன்

---

# வலிகாமம் வலய தமிழ் மொழித்தின போட்டி முடிவுகள் வெளியாகின

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையே கடந்த சனி, ஞாயிறு தினங்களில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் இடம்பெற்ற தமிழ்மொழித்தினப் போட்டிமுடிவுகள் வெளியாகியுள்ளன.

வாசிப்பு, கதை கூறல், பேச்சு, பாவோதல் இசையும் அசைவும், தனி இசை, தனி நடனம் ஆகிய போட்டிகளின் முடிவுகளில் முதல் 3 இடங்களையும் பெற்றவர்களின் பெயர்கள் பிரிவுரீதியாக கீழே தரப்படுகிறது.

### வாசிப்பு

பிரிவு I

பா. சிந்துஜா, (வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி), க. ஞானசக்தி (ஏழாலை சைவ மகாஜனா வித்தி), இ. சுஜீவன், (நவாலி சென். பீற்றர்ஸ் மகா வித்தி).

பிரிவு II

யோ. கார்த்திகா (மகாஜனாக் கல்லூரி), சி. சிந்து (இணுவில் மத்திய கல்லூரி) செல்வி த. தர்மசேகரம் (சுதுமலை சிந்மய பாரதி வித்தி)

### கதைகூறல்

பிரிவு I

க. கமஷயன் (மல்லாகம் விசாலாட்சி வித்தி), இ. பிரமிளா (மானிப்பாய் சோதி வேம்படி வித்தி), கே. பவப்பிரியசர்மா (இணுவில் மத்திய கல்லூரி).

### பேச்சு

பிரிவு i

ம. துளசி (வட்டு. யாழ்ப்பாணக்கல்லூரி) க. உஷாந்தன் (மானிப்பாய் சோதி வேம்படி வித்தி) சி. சாம்பவி (உடுவில் மகளிர் கல்லூரி).

பிரிவு II

செல்வி க. கிருஷ்ணா (மகாஜனக் கல்லூரி) தெ. சிவரூபன் (பிரான்பற்று கலைமகள் வித்தி) சி. கவிதா (பண்ணாகம் மெய்கண்டான் வித்தி)

பிரிவு IV

மு. குகலிங்கன் (பண்ணாகம் மெய்கண்டான் வித்தி), ந. வசுமதி (இராமநாதன் கல்லூரி), யே. ஜெயராசா (சில்லாலை றோ. க. த. க. பாடசாலை),

பிரிவு V

த. சுதர்சினி (மகாஜனாக் கல்லூரி), க. கலையரசி (ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, சி. வின்சனா (வட்டு யாழ்ப்பாணக்கல்லூரி),

### பாவோதல்

பிரிவு I

சு. வத்சலா (தெல்லிப்பளை சைவப் பிரகாச வித்தியாலயம்), அ. அபிராமி (சுதுமலைசிந்மயபாரதிவித்தி, ம. சரண்யா (உடுவில் மகளிர் கல்லூரி,

பிரிவு II

சி. அபிராமி (வட்டு யாழ்ப்பாணக் கல்லூரி), க. பாலகாந்தன் (மகாஜனக் கல்லூரி, அ. மகிழினி (உடுவில் முருகமூர்த்தி வித்தி),

பிரிவு III

இ. துளசா (மகாஜனக் கல்லூரி), ஜெ. வைஷ்ணவி (மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை), சி. நந்தகோபால் (வட்டு மத்திய கல்லூரி,

பிரிவு IV

ச. சிவகாந்தன் (வட்டு. யாழ்ப்பாணக்கல்லூரி ம. லோகபரணி (மகாஜனக் கல்லூரி), இ. யாழினி (மானிப்பாய் மகளிர் கல்லூரி),

பிரிவு V

ம. திருவரங்கன் (வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி), இ. கோகிலா (இராமநாதன் கல்லூரி), பா. மகிஜினி (மகாஜனக் கலலூரி),

### இசையும அசைவும்

பிரிவு I

செ. திவ்வியகரி (வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி), ம. மதுராஜினி (மானிப்பாய் விவேகானந்தா வித்தியாலயம்) த. யேவிதா ஏழாலை தெற்கு அ. மி. த. க பாடசாலை)

### தனி இசை

பிரிவு II

பொ. அனற்றினா (மானிப்பாய் சென் ஆன்ஸ் பாடசாலை), ம. உமணன் (தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தி) சி. அம்பிகா இராமநாதன் கல்லூரி)

பிரிவு III

சி. வாசுகி (மானிப்பாய் மகளிர் கல்லூரி) டு. சொருபிகா (சுழிபுரம் விக்டோறியா கல்லூரி), யோ. மேரிமிர்லாஜினி (உடுவில்மகளிர்கல்லூரி)

பிரிவு IV

செ. சுபகரி (வட்டு யாழ்ப்பாணக் கல்லூரி), ஜெ. ரஜீபன் (மானிப்பாய்இந்துக்கல்லூரி), தே. டயானி (யூனியன் கல்லூரி)

பிரிவு V

த. சிலோஜினி (வயாவிளான் மத்திய மகாவித்தி அ. இமாலினி (மானிப்பாய் மகளிர் கல்லூரி த. தமிழினி (இராமநாதன் கல்லூரி)

தனி நடனம்: பிரிவு 1

ஜெ. வினோஜா வட்டு: மத்தியகல்லூரி) பு. சுகன்ஜா (சுதுமலை சின்மய பாரதி விததி), த. நித்யா (இராமநாதன் கல்லூரி,

பிரிவு II

சி. பிரபூர்ணா (யூனியன் கல்லூரி), சி. சிவவேணுகா (சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி வி. தாட்ஷாயினி (மானிப்பாய் சென் ஆன்ஸ் வித்தி)

பிரிவு III

சு. வாசுகி (சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி), சி. சிவதாரணி (இராமநாதன் கல்லூரி), ரெ. அனுஜா (வயாவிளான் மத்திய மகாவித்தி)

பிரிவு IV

வி. ஜீவிதா (யூனியன் கல்லூரி), ஆ. ஜீவிதா (இராமநாதன் கல்லூரி) ச. சுதன். வட்டு இந்துக்கல்லூரி)

பிரிவு V

கு. சுமங்கலை (வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி), கோ. கோமதி (இராமநாதன் கல்லூரி) செ. அனுஜா (பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி).

(உ-3)

---

மணிக்கூட்டு கோபுர வீதிப்பாவனை

# மட்டுப்படுத்தப்பட்டுள்ளது மேயர் அதிருப்தி

(யாழ்ப்பாணம்)

மணிக்கூட்டுக் கோபுர வீதி திறக்கப்பட்டுள்ள போதிலும் அதனால் பிரயாணம் செய்ய சைக்கிள், மோட்டார் சைக்கிள் தவிர்ந்த ஏனைய வாகனங்கள் அனுமதிக்கப்படவில்லை எனவும் இது அப்பாதை திறக்கும் போது கூறப்பட்ட உறுதி மொழிக்கு முரண்பாடாக இருப்பதாகவும் மாநகர முதல்வர் செ. சந்தையன் குற்றஞ் சாட்டியுள்ளார்.

சகல வாகனங்களும் இப்பாதையூடாக பிரயாணம் செய்ய அனுமதிப்பதாக கூறப்பட்ட போதிலும் தற்போது பாதைக்குக் குறுக்கே தடுப்புப் போடப்பட்டுள்ளது.

அதனால் நகருக்கு வரும் வாகனங்களும், வெளியில் செல்லும் வாகனங்களும் பொலிஸாரால் திருப்பி அனுப்பப்பட்டதை தான் நேரில் கண்டதாகவும், இது தொடர்பாக உரிய அதிகாரிகளைச் சந்தித்துப் பேச இருப்பதாககவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-5)

---

இன ஒற்றுமையை வலுப்படுத்த,

# ஜனாதிபதி ஏற்பாட்டில் தேசிய கருத்துப் பரிமாறல்

(கொழும்பு)

இனங்களுக்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்தும் நோக்குடன் தேசிய கருத்துப் பரிமாறல் ஒன்றை ஜனாதிபதி ஆரம்பித்துள்ளார்.

இனங்கள் மத்தியில் பிளவு ஏற்படுவதற்குக் காரணமான விடயங்கள் பற்றி ஆராய்வதற்கும் பல்லின மக்கள் வாழுகின்ற சமுதாயம் ஒன்றை உருவாக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கும் பொருட்டும் சமூகத்தில் சகல குழுவினருடனும் விரிவான முறையில் உரையாடுவதற்குமாகவே இந்த கருத்துப் பரிமாறல் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுளளது.

இந்த நிகழ்ச்சியில் பொது மக்கள் மற்றும் ஸ்தாபனங்கள கருத்துக்களை தெரிவிக்கமுடியும் என்றும் ஜனாதிபதி செயலகம் நேற்று முன் தினம் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-5)

---

சலனசித்திரத்தின் ஏற்பாட்டில்

# தென்மராட்சியில் இலவச திரைப்பட வகுப்புகள்

(யாழ்ப்பாணம்)

'சலனசித்திரம்- யாழ்ப்பாணம்' திரைக்கலைச் சங்கத்தினால் தென்மராட்சியில் இலவச திரைப்படத் தொழில்நுட்ப வகுப்புகள் நடத்தப்படவுள்ளன.

மேற்படி அமைப்பின் தென்மராட்சிப் பிரதேசக் கிளையின் ஏற்பாட்டில் நாளையும் நாளை மறுதினமும் பிற்பகல் 3.00 மணிக்கு மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் இவ் வகுப்புகள் நடைபெறவுள்ளன.

சினிமா வரலாறு, திரைக்கதையாக்கம், இயக்கம், ஒளிப்பதிவு, நடிப்பு, திரை இசை ஆகிய தலைப்புகளில் நடைபெறவுள்ள இவ்வகுப்பின் முடிவில் பயிற்சியுடன் சான்றிதழும் வழங்கப்படவுள்ளதாகவும்,

இதில் ஆர்வமுள்ள இருபாலாரும் கலந்து கொளள முடியும் என்றும் கிளைப் பொதுச் செயலாளர் அறிவித்துள்ளார். (ஷ)

---

# நாவாந்துறை வீதியில் சுகாதாரச் சீர்கேடு

(வட்டுக்கோட்டை)

ஒட்டுமடம் சந்திப்பகுதியில் இருந்து நாவாந்துறை செல்லும் வீதி ஓரங்களில் பெருமளவு குப்பை கூழங்கள் குவிக்கப்பட்டுள்ளன.

இதனால் வீதிப்போக்குவரத்துக்களில் பயணிகளுக்குப் பெரும் அசௌகரியங்கள் ஏற்படுவதோடு குப்பை கூழங்களில் இருந்து துர்நாற்றமும் வீசுகின்றது.

யாழ்ப்பாணத்தில் முஸ்லிம் மக்கள மீளக்குடியமர்வதைத் தொடர்ந்து இவ்வீதிப்போக்குவரத்து தற்போது அதிகரித்துள்ளது. (உ-216)

---

# தமிழ்த்தின விழா

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலய தமிழ்த் தின விழா இன்று முற்பகல் 10.00 மணிக்கு அதிபர் எஸ். சண்முககுமார் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி க. சுப்பிரமணியமும், சிறப்பு விருந்தினராக நல்லூர் கோட்ட கல்வி ஆலோசகர் (தமிழ்) தி. தயாபரனும் கலந்துகொள்ளவுள்ளனர்.

(ஷ)

---

# நெஞ்சுறுத்தும் கானல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட மக்களை மிதிவெடிகள் மற்றும் வெடிபொருட்களில் இருந்து பாதுகாக்கும் நோக்குடன் யுனிசெவ் நிறுவனமும் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனமும் இணைந்து செயற்படுத்தி வரும் நாடக ஆற்றுகையான ''நெஞ்சுறுத்தும் கானல்'' இன்று குடமியன் அ.த.க. பாடசாலையில் நடைபெறவுள்ளது. (உ-3)

---

# வைத்திய சேவை

(யாழ்ப்பாணம்)

புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சுஏற்பாட்டில்கொழும்பில் இருந்து வந்துள்ள டாக்டர் லியனகே தலைமையிலான வைத்தியர் குழு, இன்று நெடுந்தீவு மாவட்ட வைத்திய சாலையில் அப்பகுதிப் பொதுமக்களுக்கு இலவச வைத்திய சேவையை வழங்கவுள்ளது. (உ)

---

# ரப்பர் கூட்டுத்தாபன மோசடி குறித்துவிசாரணை

(கொழும்பு)

கடந்த 6 வருடங்களாக ரப்பர் உற்பத்தி ஏற்றுமதி கூட்டுத்தாபனத்தில் இடம்பெற்ற பெரும் மோசடி பற்றிய விசாரணைகள் பொலிஸ்மா அதிபர் லக்கி கொடித்துவக்குவின் உத்தரவுக்கமைய நேற்று முன் தினம் ஆரம்பமாகின.

பொலிஸ்மா அதிபர் லக்கி கொடித்துவக்கு இது குறித்து தெரிவிக்கையில்; அமைச்சரவையின் அறிவுறுத்தல்களுககமைவாகவே இம்மோசடியை விசாரணை செய்வதற்கு சி. ஐ. டி பிரிவுக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபருக்குதான் பணிப்புரைகளை விடுத்துள்ளதாக குறிப்பிட்டார்.

கடந்த ஆட்சிக்காலத்தின் போது ரப்பர் கூட்டுத்தாபனத்திற்கு 900.34 மில்லியன் ரூபாக்களை திறைசேரி விடுவித்துள்ளதாக விசாரணையாளர்கள் தெரிவித்துள்ளனர். அப்போதைய நிதியமைச்சராக இருந்தவர் ஜனாதிபதி சந்திரிக்காவே,

இறப்பர் கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களால் 541மில்லியன் ரூபாக்கள் வீணடிக்கப்பட்டுள்ளது. இன்னும் 152 மில்லியன் ரூபாகணக்கில் பதியப்படவில்லை. என்றும் இதற்கு என்ன நடந்தது என்பது பற்றி உறுதிசெய்வதற்கு தாம் முயற்சித்து வருவதாவும் தெரிவித்தார். (உ)

முதல்வர் ஜெயா இரகசிய ஏற்பாடு

# போடோ சட்டத்தின் கீழ் விரைவில்

# டாக்டர் ராமதாஸ் கைதாகலாம்

(புதுடில்லி)

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் வை. கோபாலசாமியை அடுத்து, பாட்டாளி மக்கள் கட்சித்தலைவர் டாக்டர்ராமதாஸும் போடோ தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படலாம் என இந்திய பத்திரிகைகள் பல செய்தி வெளியிட்டுள்ளன.

இதற்கான சகல ஏற்பாடுகளையும் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா இரகசியமானமுறையில்மேற்கொண்டு வருவதாக அப்பத்திரிகைகள் சுட்டிக்காட்டியுள்ளன.

டாக்டர் ராமதாஸும் வை. கோவை போன்று தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக பேசினார் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே கைது செய்யப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, மறுமலர்ச்சி திராவிடமுன்னேற்றக் கழகத்தின் தலைவர் வை. கோவை, போடோ சட்டத்தை ரத்து செய்து விடுதலை செய்ய வேண்டுமென இந்தியாவின் எதிர்க்கட்சிகள் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் வலியுறுத்தியுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

தாய்வானைத் தாக்கும் நோக்குடன்

# 350 ஏவுகணைகள் சீனாவசம் உள்ளனவாம்

(பீஜிங்)

தன் இராணுவ பலத்தை சீனா அதிகரித்து வருவதனால் தென்கிழக்காசிய நாடுகளிடையே அச்சம் ஏற்பட்டுள்ளதாக தாய்வான் கருத்து வெளியிட்டுள்ளது.

இதேவேளை, தாய்வான் மீது சீனா பாரிய யுத்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான சாத்தியக்கூறுகள் தென்படுவதாக பென்டகனில் இருந்து வெளியிடப்பட்ட அறிக்கையொன்றில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தாய்வானை தாக்கும் நோக்குடன் சீனா 350 ஏவுகணைகளை தன்வசம் வைத்திருப்பது தெரியவந்துள்ளதாக அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீன ஏவுகணை உற்பத்தி வீதம் நாளாந்தம் அதிகரித்து வருவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-8)

# 17 வது பொதுநலவாய விளையாட்டுப் போட்டி

## 25 ஆம் திகதி ஆரம்பம்

(மான்ஷெஸ்டர்)

17 ஆவது பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகள் மன்ஷெஸ்டரில் எதிர் வரும் 25 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

இப்போட்டியில் 72 நாடுகள் பங்குகொள்வதுடன், 19வகையான விளையாட்டுகள் இடம் பெறவுள்ளன.

5 ஆயிரத்து 250 விளையாட்டு வீரர்கள் பங்குகொள்ளவுள்ளனர்.

2000 ஆம் ஆண்டின்பொது நலவாய விளையாட்டுப் போட்டிகள் சிட்னியில்நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ-3)

# உலக தரிசனம்

# நடிகர் ராஜ்குமார் விடுதலைக்காக வீரப்பன் ரூ. 40 கோடி பெற்றார்

(புதுடில்லி)

கன்னட நடிகர் ராஜ்குமார் கடத்தப்பட்ட போது அவரை விடுவிப்பதற்காக சந்தனக் கடத்தல் வீரப்பனுக்கு 40 கோடி ரூபா பிணைத்தொகை செலுத்தப்பட்டதாக ஈரோடு நீதி மன்றத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது

அரசின் சிறப்பு வழக்கறிஞர் சங்கர் நாராயணன் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடத்தலுக்கு உடந்தையாக இருந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் நக்கீரன் பத்திரிகை நிருபர் சிவசுப்பிரமணியனின் மனுவுக்கு அவர் எதிர்ப்புத் தெரிவித்தார்.

2000 ஆம் ஆண்டு யூன் மாதம் கடத்தப்பட்ட ராஜ்குமார் 100 நாட்களுக்குமதிகமாகப் பிணைக் கைதியாக வைக்கப்பட்டிருந்தார். வீரப்பனுக்குப் பிணைத் தொகையாக செலுத்தப்பட்ட 40 கோடி ரூபாவில் முதல் தவணையில் 10 கோடி ரூபா நக்கீரன் ஆசிரியர் கோபால் மற்றும் சிவசுப்பிரமணியன் வழியாக அனுப்பி வைக்கப்பட்டது என்றும், ராஜ்குமாரின் புதல்வர்கள் இத் தொகையைக் கொடுத்தார்கள் என்றும் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

இக் கடத்தல் சம்பவத்தின் போதும் பின்னரும் கர்நாடக முதலமைச்சர் எஸ். என். கிருஷ்ணாவும், தமிழ் நாட்டின் முன்னாள் முதலமைச்சர் மு. கருணாநிதியும் ராஜ்குமாரை விடுதலை செய்வதற்காக பிணைத்தொகை எதுவும் செலுத்தப்படவில்லை என்று தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (ஷ)

# 20 தமிழ்ச்சிறுகதைகள் பிரெஞ்சுக்குமொழிமாற்றம்

(புதுடில்லி)

முதன்முறையாக 20 தமிழ் சிறுகதைகள் பிரெஞ்சில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளன.

புதுச்சேரியிலுள்ள பிரெஞ் நிறுவனத்தின் ஆராய்ச்சிவிற்பன்னரான என் சண்ணன் மற்றும் தென்னிந்தியா பற்றி ஆய்வு செய்யும பிரான்ஸ் வல்லுநர் பிறாங்கில் புறூஸ் ஆகியோர் 1935 முதல் 1995 வரையிலான காலத்தில் எழுதப்பட்டபிரபல தமிழ்ச்சிறுகதைகளைத் தெரிவு செய்து மொழி பெயர்த்துள்ளனர்.

சி.சு. செல்லப்பா சுந்தர ராமசாமி, ஜானகிராமன், க. சுப்பிரமணியன் ஆகியோர் எழுதிய சிறுகதைகளும் இதில் அடங்குகின்றன.

தமிழ்ச் சிறுகதைகளின் மொழிமாற்றம் தமிழ் மற்றும் பிரெஞ்சு மொழிகளின் இலக்கியவளர்ச்சியில் ஒரு மைல்கல்லாகும் என மொழி ஆர்வலர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். (ஷ)

ரத்வத்தவின் புதல்வர்கள் விவகாரம்

# சிறைச்சாலை ஆணையரை மன்றில் ஆஜராக உத்தரவு

(கொழும்பு)

அனுருத்த ரத்வத்தையின் புதல்வர்களான லோஹான் படுவமற்றும் சாணுக்க ரத்வத்தை ஆகியோர் மனிதாபிமானமற்றமுறையில் நடத்தப்படுவதாக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்காக சிறைச்சாலைகளின் ஆணையாளர் நாயகத்தையும் போகம்பறைசிறைச்சலையின் அத்தியட்சகரையும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் எதிர் வரும் புதன்கிழமை ஆஜராகுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளைசகோதரர்இருவருக்கும் பிணை அனுமதி மறுக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (உ)

யாழ்.மாநகரசபை

# குறைபாடுகளை ஆராய விசேடகுழு அமைப்பு

யாழ். மாநகரசபையின் குறைபாடுகளை ஆராயவென விசேடகுழுவொன்றைஅமைப்பதற்கான தீர்மானம் ஒன்று நேற்றுமுன்தினம்நடைபெற்ற மாநகரசபையின் மாதாந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

அக்குழுவில் மாநகர முதல்வர் செ. கந்தையனும் உறுப்பினர்களும் அங்கம்வகிப்பர்.

மாநகரசபையில் ஏற்பட்டு வரும் குளறுபடிகளைநீக்கவே இக்குழு அமைக்கப்படுவதாக முதல்வர் தெரிவித்தார். (ஷ-19)

நவாலி வடக்கு

# வயற் கிணற்றிலிருந்து சிறுமியின் சடலம் மீட்பு

(மானிப்பாய்)

நவாலி வடக்கு அட்டகிரி முருகன் ஆலயப்பகுதியிலுள்ள வயல் வெளிக்கிணற்றிலிருந்து கடந்த புதன்கிழமைநண்பகல் சிறுமியின் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

நவாலி வடக்கு மானிப்பாயைச்சேர்ந்தஇராசலிங்கம் ரேகா(வயது 11) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

மானிப்பாய் பொலிஸாரினால் சடலம் பிரேதபரிசோதனைக்காக யாழ் போதனா வைத்தியசாலையில்ஒப்படைக்கப்பட்டது. (ஷ-232)

# அடக்கியாளும் தந்திரத்திற்கு அடிபணியப் போவதில்லை

## அமெ. அறிக்கைக்கு ஈராக் பதிலடி

(பக்தாத்)

அமெரிக்காவினால் ஈராக்கிற்கு விடுக்கப்பட்டு வரும் அச்சுறுத்தல்களும், அடக்கியாளும் தன்மைகளும் தன்னை ஒருபோதும் ஒன்றும் செய்யாது என ஈராக்கிய ஜனாதிபதி சதாம்ஹுசைன் தெரிவித்துள்ளார்.

நாட்டு மக்களுக்காக நேற்று முன்தினம் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஈராக்கிய ஜனாதிபதி சதாமின் தலைமையில்ஆட்சிநடைபெறுவதை தான் ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை என அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் அண்மையில் வெளியிட்ட கருத்துத் தொடர்பாகவே அவர் இவ்வாறு காட்டமாகப் பதிலளித்துள்ளார்.

இதற்கிடையில் அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலாளர், ஈராக்கின் மீதான போர் நடவடிக்கைகளுக்கு ஆதரவு திரட்டி வருவதாக வெள்ளை மாளிகை வட்டாரங்கள் செய்தி வெளியிட்டுள்ளன (உ-8)

# வை.கோ. கைதை கண்டித்து மட்டு. மாவட்டத்தில் நேற்று கண்டனப் பேரணி

(மட்டக்களப்பு)

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகத்தின் பொதுச் செயலாளர் வை. கோபாலசாமியை போடோ தடைச் சட்டத்தின் கீழ் தமிழக அரசு கைதுசெய்துள்ளமையை கண்டித்து நேற்று மட்டக்களப்பு மாவட்டத்தில் மாபெரும் கண்டனப் பேரணியும், பொதுக்கூட்டமும் நடைபெற்றன.

கடந்த 11 ஆம் திகதி இவர் கைது செய்யப்பட்டதை கண்டித்து தமிழ்க் கூட்டமைப்பு இதனை ஏற்பாடு செய்துள்ளது.

மட்டக்களப்பு நகரப் பகுதியிலிருந்து நேற்றுக்காலை 9-00 மணிக்கு புறப்பட்ட கண்டனப் பேரணி அமிர்தகழி மாமாங்கேஸ்வரர் ஆலயத்தை சென்றடைந்தும், அங்கு பொதுக் கூட்டம், உண்ணாவிரதம் என்பன இடம்பெற்றன.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உபதலைவர் ஜோசப்பரராசசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்விற்கு, மட்டக்களப்பு மாவட்டபாராளுமன்ற உறுப்பினர்களான தங்கவடிவேல், கிருஷ்ணபிள்ளை ஆகியோரும், உள்ளூர் தொண்டு நிறுவனங்களின் பல முக்கிய பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

இந் நிகழ்வின் இறுதியில் இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய், தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா, எதிர்க் கட்சித் தலைவர் கருணாநிதி ஆகியோருக்கு மகஜர்கள் அனுப்பிவைக்கப்பட்டன. (உ-8)

# பாங்கொக் கடற் பிராந்தியத்தில் ஆயுதக் கடத்தல் முறியடிப்பு

## இலங்கைக்கு எடுத்துச் செல்லப்பட்டதாக சந்தேகம்

(பாங்கொக்)

பாங்கொக் நகரில் இருந்து தெற்கே 790 மைல் தொலைவில் உள்ள தாய்லாந்து சதுன் மாநில கடற்பரப்பில் வள்ளம் ஒன்றில் ஆயுதம் கடத்தும் முயற்சியைஅந்நாட்டுப்பொலிஸார் முறியடித்துள்ளனர்.

ஏ.கே-47 துப்பாக்கிகள் 68 மற்றும் அதற்கான ஆயிரக்கணக்கான ரவைகள் என்பன மேற்படி வள்ளத்தில் இருந்து மீட்கப்பட்டுள்ளன.

இந்த ஆயுதங்கள் கம்போடியாவில் இருந்து தாய்லாந்து கடற் பிரதேசத்தினூடாக கடத்தப்பட்டு இந்தோனேசியா, இலங்கை ஆகிய நாடுகளில் பிரிவினை கோரிப் போராடி வரும் இயக்கங்களுக்கு விநியோகிக்கப்படவிருந்ததாக பாங்கொக் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்படிவள்ளத்தில்இருந்து நால்வர் கைது செய்யப்பட்டபோதிலும், உண்மையைக்கூற அவர்கள் மறுத்து வருவதாகவும் கூறப்படுகிறது. (உ)

பல்லவை கற்றும் பயமிலரே நல்லவையுள்
நன்கு செலச் சொல்லாதார்

குறள்

# வலம்புரி

## மாநகர சபையின் முக்கியபணி

யாழ்ப்பாணம் மாநகரம் மக்களால் தெரிவு செய்யப்பட்ட சபையால் நிர்வகிக்கப்படுகிறது. எனினும் அதனது பணிகள் கடந்த காலங்களை விட முன்னேற்றம் அடைந்ததாகத் தெரியவில்லை. இதற்கு முக்கிய காரணமாக அமைவது மாநகர சபையின் மாதாந்த கூட்டங்களில் உருப்படியான தீர்மானங்கள் எடுக்கப்படாமையேயாகும்.

யாழ். மாநகர சபையின் ஒவ்வொரு கூட்டங்களிலும் கூச்சலும், கூக்குரல்களும் கேட்கின்றனவே தவிர உருப்படியாக எந்தத் திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டதாகத் தெரியவில்லை. சபைக் கூட்டங்களில் யார் உரத்துக் கதைப்பது என்றபோட்டி நடைபெறுகிறதோ என்று கூட சிந்திக்குமளவிற்கு ஓர் வரையறைக்குள் நின்று மாநகரத்தின் அபிவிருத்தி, புனரமைப்பு பற்றிச் சிந்திப்பதாகத் தெரியவில்லை.

சபைக் கூட்டங்களில் கதைக்கவேண்டியவற்றை கதைக்காமல்தேவையில்லாதவற்றை முன் ஆயத்தமற்ற நிலையில் உறுப்பினர்கள் பேச முற்படுவதால் அங்கு எடுக்கப்பட வேண்டிய தீர்மானங்களை எடுக்க முடிவதில்லை.


இவ்வாறு சபைக் கூட்டங்கள் குழம்புமாயின் நிர்வாக வண்டியை சட்ட வரம்புகளுக்குள் நின்று நகர்த்தும் பொறுப்பைக் கொண்டுள்ள மாநகர சபையின் ஆணையாளரோ அல்லது பணியாளர்களோ தமது கடமையை மேற்கொள்வதில் பல சிக்கல்களை எதிர்நோக்க வேண்டியதாக இருக்கும்.

எனவே யாழ்ப்பாணத்தின் மாநகரம் அபிவிருத்தியடைய வேண்டுமாயின் சபை உறுப்பினர்கள் தத்தம் பகுதிகளுக்கு நேரில் விஜயம் செய்து அங்குள்ள குறைகளைக் கண்டறிவதும், அவற்றை நிவர்த்திசெய்வதான திட்டங்களைத் தயாரித்து கூட்டங்களில் முன்மொழிவதும் அவசியமாகும்.

அதேவேளைநிர்வாகத் துறையில் அனுபவம் வாய்ந்த ஆணையாளர் மற்றும்துணைத்தலைவர்களின் ஆலோசனைகளைப் பெற்று செயற்திட்டங்களை அமுல்படுத்துவது முகாமைத்துவத் திறன் வாய்ந்த ஓர் சபையின் செயலாட்சியாக இருக்கும்.

# ஏகப்பரம் பொருளை ஆகம நெறிப்படி பூசித்த சைவ அருளாளர்கள் போற்றுதற்குரியவர்கள்

## வெள்ளி நற்சிந்தனை



இந்திய மதங்கள் தத்துவங்கள் பலவற்றில் வேதமும் ஆகமமும் முக்கிய இடம் பெறுகின்றன. வேதாகமங்களை ஏற்காத மதங்களிலும் இவை ஓரளவு தாக்கத்தை உண்டு பண்ணியுள்ளன. வேதத்தைப் போல் ஆகமமும் பழமை மிக்கது. வேதநெறி பெரும்பாலும் இந்தியாவில் வடக்கே பரவியிருக்க ஆகம நெறி தெற்கே செழித்து வளர்ந்துள்ளது.

### சைவத்தின் தளம்

சைவசமயம் வேதத்தையும், ஆகமத்தையும் பிரமாணமாகக் கொள்கின்றது. இவை இரண்டும் இறைவழி காட்டும் மெய்யறிவு இலக்கியங்கள். ஆயினும் சைவத்துக்கு வேதம் பொது. ஆகமம் சிறப்பு என்று திருமூலர் தனது திருமந்திரத்தில் கூறுகிறார். சைவம் வேதகாலச் சிந்தனையுடன் தொடங்குகிறது என்று முன்னர் கருதப்பட்டது. ஆயினும் சிவ வழிபாடும், சைவ நெறியும் வேதகாலத்துக்கு முன்பே இருந்தன என்பதை அகழ்வாராய்ச்சிகளிலிருந்தும் அறிஞர் கருத்துக்களில் இருந்தும் அறியமுடிகிறது.

பலவகைக் கருத்துக்களை உள்ளடக்கியவை வேத நூல்கள். அவற்றிலுள்ள கருத்துக்கள் எல்லாம் சைவத்துக்கு உடன்பாடானவையல்ல. இறை, உயிர், உலகு பற்றிய வேதஇலக்கியங்களின்போக்கு பொதுவகையாக உள்ளது. இதற்கு மாறாக ஆகமங்களின் நோக்கு தெளிவாக இருக்கிறது. கோயில் அமைப்பு, வழிபாட்டு முறைகள் ஆகியவை பற்றி ஆகமங்கள் வரையறுக்கப்பட்ட தெளிவான நெறிகளைக் கூறுகின்றன. வேதத்தை விட ஆகமம் சிறப்பான இடத்தைப் பெறுகிறது. இதனால் சைவத்துக்கு வேதம் பொது. ஆகமம் சிறப்பு என்று ஞானிகள் கூறுகின்றனர். இன்று சைவத்தமிழ் மக்களிடையே வழக்கிலுள்ள சைவநெறிகள், தத்துவங்கள், கிரியைகள் ஆகியவை பெரும்பாலும் சிவாகமங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளன. இதிற் செறிந்துள்ள வேதங்களின் பங்கு மிகச் சிறந்தது என்றே கொள்ளவேண்டும்.

### வேதாந்தத் தெளிவு

வேதாந்தத்தின் அடிப்படையில் எழுந்தசமயநெறிவைதீக நெறி அல்லது வைதீக சமயம் எனப்படும், வேதநூல்கள் இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என நான்காக உள்ளன. ஆயினும் பொதுவாக

**க. கணேசலிங்கம்**
மெய்கண்டார் ஆதீனம், லண்டன்.

அவற்றை கர்மகாண்டம், ஞானகாண்டம் எனப் பிரிப்பது உண்டு.

முன்னர் வந்த வேதநூல்கள் பெரும்பாலும் மந்திரம், கிரியை முதலியவை பற்றி இருப்பதால் கர்மகாண்டத்தில் இடம்பெறுகின்றன. பின்னர் வந்த வேதநூல்கள் உபநிடதங்கள் எனப்படும். வேதாந்தம் என்றும் இவை குறிக்கப்படுகின்றன. வேதகாலச் சிந்தனை வளர்ச்சியில் இறுதியாக வந்த உபநிடதங்களில் அறிவுசார் கருத்துக்கள் இருப்பது இயல்பே, ஆகவே, இவை ஞானகாண்டத்தில் இடம்பெறுகின்றன. ஆயினும் வேதாந்தக் கருத்துக்கள் தெளிவற்றவையாகவே உள்ளன. இதனாற்றான், இவற்றின் விளக்கமாகப் பின்னாளில் அத்வைத வேதாந்தம், விஷிட்டாத்வைதம், துவைதம் எனப் பல கொள்கைகள் எழுந்தன.

ஆகமத்தைப் பொறுத்தவரை இத்தகைய நிலை எழவில்லை. சைவ சமயதத்துவமான சைவ சித்தாந்தத்துக்கு அடிப்படை சைவ ஆகமத்தின் ஞானபாதமென்று கொள்ளலாம். இறை, உயிர், உலகு ஆகியவை பற்றிவேதாந்தம் கொண்டகருத்து தெளிவற்றதாக இருக்க, சித்தாந்தம் கொண்ட கருதது தெளிவுடையதாக இருக்கிறது. இதனாலேயே "வேதாந்தத் தெளிவாம்சைவசித்தாந்தத்திறன்" என்று உமாபதி சிவாச்சாரியார் தனது சிவப்பிரகாசம் என்ற நூலில் கூறுகிறார். இதனாலும் சைவத்துக்கு வேதம் பொதுஆகமம் சிறப்பு என்றாகிறது.

### ஆகமத்தின் எழுச்சி

வேத நெறியில்தீவளர்த்து, அவிப்பொருட்களை அதிலிட்டு வழிபடும் வழக்கம் உண்டு. அங்ஙனம் இட்ட பொருட்களைத்தீஏற்றுஇறைவனிடம் சேர்க்கும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் எழுந்தது இந்த வழக்கம். இந்த வேத நெறியில் உயிருள்ள பிராணிகளும் அவிப்பொருட்களாகப் படைக்கப்பட்டன என்பது வரலாற்றாசிரியர் கருத்து. மகாபாரதப் போரினால் ஏற்பட்டபெரும் அழிவுமக்களிடையே ஒருமன மாற்றத்தை உண்டுபண்ணியது. உயிர்க்கொலை தொடர்பான வேள்விகளை விதித்த வேதங்களின் செல்வாக்குச்சரியத் தொடங்கியது என்பதும் அறிஞர் கருத்தாக உள்ளது. இந்த நிலையில் ஆகமங்கள் எழுச்சிபெற்றன. ஆகமநெறி நெருப்பின் (பிராகிருத அக்னியின்) தொடர்பில்லாதது. இறைவனுக்குக் காணிக்கையாகப் பொருட்களைப் படைத்து. தீப, தூபம்காட்டி, மலரிட்டு வழிபடுவது ஆகம வழக்கு. வேதம் சார்ந்து வைதீக நெறியில் ஒவ்வொரு செயலுக்கும் ஒவ்வொரு கடவுளைக் கற்பித்து அதற்குரிய மந்திரங்களை ஓதி கிரியைகள் செய்யப்படும். ஆகம நெறியில் ஒருகடவுளே பல்வேறு செயல்களை (பல்வேறு நிலைகளில் நின்று) செய்வதாக நம்பப்படுகிறது. இறைவனுக்குரிய பல்வேறு பெயர்களை (நாமங்களை) ஓதிப்போற்றுவது வழக்கம், தனக்கு மேலான தலைவனுக்கு உபசாரமாகப் பண்டங்களை வழங்கிப் போற்றுவது போன்றது ஆகம வழக்கு. இதில் இறைவன் எம்முடன் அல்லது எமக்கருகில் இருப்பது போன்ற உணர்வு ஏற்படுகிறது. இறைவன் ஏலவே உயிருக்குயிராய் இருக்கிறான் என்ற உண்மைக்கு இது உகப்பாயும் இருக்கிறது.

### பக்திநெறி

வேதங்களின் முடிநிலையாக உபநிடதங்களும், கர்மகாண்டத்தில் முடிநிலையாக ஞானகாண்டமும் பேசப்படுகின்றன. எந்தக் கர்மத்தின் (கிரியை) வழிசென்றாலும் இறுதியில் ஞானத்தின் வழியாகத்தான் இறைவனை அடைய முடியுமென்பது வேதாந்திகளின் கொள்கை. இங்கே பக்திநெறிக்கு இடமில்லை, ஆகமங்கள் கர்மத்துக்கும், ஞானத்துக்கும் முக்கிய இடமளிப்பதோடு பக்திநெறிக்கும்வித்திட்டன. நாயன்மார்காலத்தில் பக்தி இயக்கம் தமிழகத்தில் பெருமளவில் பரவியது. வைணவம் போன்ற பிறசமயங்களிலும் பக்தி மார்க்கம் வேரூன்றியது. இதற்கு அந்தச் சமயங்களுக்குரிய ஆகமங்கள் அடித்தளமாக அமைந்தன, பக்திநெறிக்கு வேதங்களின் பங்களிப்பு இல்லையென்றே கூற வேண்டும். இறைவனை அடைய எளிமையான வழி பக்தியே என்று நாயன்மார்களும், ஆழ்வார்களும் எடுத்துக் காட்டினார்கள். பக்தி நெறியிலே நின்று, அசைக்க முடியாத இறை நம்பிக்கையில் பல அற்புதங்களைச் செய்தார்கள், அவர்களின் பாடல்களுக்கு ஆற்றலுண்டு. தேவாரமும், திருவாசகமும், பிற திருமுறைப் பாடல்களும் கோயில்களிலும் வீடுகளிலும் பாடவேண்டியவை, அதனால் பெரும்பலன் கிடைக்கும்.

பக்தி நெறிக்குப் புறம்பான வேதாந்தக் கொள்கையை வகுத்த சங்கரரும், ஆகம வழியில் வந்த பக்தி மார்க்கத்தின் சிறப்பைப் பின்னாளில் உணர்ந்திருந்தார்கள். அவரின் சௌந்தரியலகரி போன்ற நூல்கள் இதன்விளைவாக எழுதப்பட்டவையே ஆயினும் அவர் தனது வேதாந்தக் கொள்கையாளராகவே இருந்து அதில்வெற்றியும்கண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

பக்தி நெறிப் பரப்பில் சைவ அருளாளர்கள் அருளிச்செய்த திருமுறைகள் ஆகமக்கருத்துக்களைச் சிறப்பாகக் கொண்டுள்ளன. திருமுறைப் பாடல்கள் இறைவன் உள்ளிருந்து உணர்த்த வெளிப்பட்டவைகள். 'எனதுரை தனதுரையாக' என்று சம்பந்தப் பெருமான் உரைக்கிறார். ஆகவே, திருமுறைகள் இறையுண்மையை உணர்த்துவதில் முன்னிலை வகிக்கின்றன. இதற்கு அடுத்த நிலையில் அமைந்தவைகள் ஆகமங்கள். இவைகளுக்கும் அடுத்த நிலையில் கீழ் நிலையில் உள்ளவைகள் வேதங்கள். இது ஆறுமுக நாவலருக்கும் உடன்பாடான கருத்து என்பதை அவர்தனது பெரிய புராணப்பதிப்பில் எழுதியகட்டுரைகளில்இருந்து அறியலாம்.

பல்வேறு கருத்துக்கள் கொண்ட வேத உபநிடதங்களில் பிரமம் பற்றிப் பேசப்படுகிறது. அது பற்றிய விளக்கம் எதுவாக இருப்பினும்அது அனைத்துக்கு மேலான ஒன்று என்பதில் கருத்து வேறுபாட்டிற்கு இடமில்லை. சைவம் கூறும் தன்னிலையில் அனைத்தையும் கடந்த அனைத்திற்கும் மேலான பரம் பொருள். வேதம் கூறும்பிரமமும்ஆகமச் சைவம் கூறும் சிவன் என்னும் பரம் பொருளும் ஒன்றே என்பது ஞானிகள் கருத்து. செந்திநாதையரும் தனது நூல்களில் இக்கருத்தை வலியுறுத்தியுள்ளார். 'வேதம் நான்கிலும் மெய்ப் பொருளாவது நாதன் நாமம் நமச்சிவாயவே' என்று தேவாரம் இதனை உணர்த்துவது. இந்தப் பிரமமாகிய சிவனையும் கோயில்களில் எழுந்தருளச் செய்து, ஆகமமுறைப்படி வழிபடுவது சைவ மரபு.

(3ம் பக்கம் பார்க்க)

## தினசரி தியானம்

### அன்பு, அறிவு

அன்பருக்கன்பான மெய்யன்- ஐயன்
ஆனந்த மோனன் அருட்குருநாதன்
தன்பாதம் சென்னியில் வைத்தான்- என்னைத்
தான் அறிந்தேன் மனந்தானிறந்தேனே.

- தாயுமானவர்

இறையே, உன்னை நேசிக்கவும், அறியவும் சற்றுக் கொள்வேனாக.

உலோபி ஒருவன் பொன்னை நேசிக்கிறான், அதனிடத்து அன்பு வைத்திருக்கிறான். ஆனால், அதன் அமைப்பைப் பற்றிய தத்துவத்தை அவன் அறியான். தாயை இழந்த குழந்தை யொன்று நோயால் வருந்துகிறது. அதன் உடலைப் பீடித்த நோய் இன்னதென்று டாக்டர் அறிகிறார். ஆனால் அதன் உள்ளத்தில் உள்ள துயரத்தை அவர் அறியார். அன்பு அறிவாக வடிவெடுக்க வேண்டும். அறிவு அன்பாக வடிவெடுக்க வேண்டும்: கடவுளிடத்துஅன்பு வைப்பதும்அவரை அறிவதும் ஒன்றே.

-- ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்

## புரிந்துணர்வு...

தெரிவித்திருந்தார். இதனை அடுத்தே அமைச்சர் பீரிஸ் புரிந்துணர்வு உடன் படிக்கையை மளாய்வு செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்றும் அந்த உடன்படிக்கையில் அரசுக்கு பூரண திருப்தி உள்ளது என்றும் கூறியுள்ளார்.

(வ)

## கலந்துரையாடல்...

துறைக்கோட்ட அலுவலகத்தில் நாளை சனிக்கிழமை காலை 10மணிக்கு நடைபெற உள்ளது.

உழவு இயந்திர உரிமையாளர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அரசியல் துறையினர் கேட்டுள்ளனர்.

(த)

## யாழ் மத்தியில் க.பொ. உயர்தர வெளிவாரிப் பிரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் க.பொ.த உயர்தர வகுப்புக்களிற்கு வெளிவாரிப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்கள் அல்லாத வெளிவாரியாக தோற்றும் மாணவர்களின் நன்மைகருதி ஆரம்பிக்கப்பட்ட இப்பிரிவின் மூலம் பரீட்சைக்கு விண்ணப்பிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வெளிவாரிப் பிரிவுக்கு விண்ணப்பிப்பவர்கள் வெளிவாரிப் பிரிவின் பொறுப்பாசிரியர் இ. இராஜேஸ்வரனுடன் செவ்வாய், வியாழன் ஆகிய தினங்களில் பிற்பகல் 2.30-4.30 மணிவரை தொடர்பு கொள்ளலாம் என அதிபர் க. இராசதுரை தெரிவித்துள்ளார்.

(ந-5)


## தெல்லிப்பளைப் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம் (வ.து.)

கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக எமது தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமைப் பணி ஏற்று அரும்பணி ஆற்றிய திரு சி. சிவமகாராசா அவர்கள இலங்கை தேசிய கூட்டு சபையினால் சிறந்த கூட்டுறவாளனாக கௌரவிக்கப்படுவதனை இட்டு அவர் பணியாற்றிய சங்கத்தவர்கள் என்று நாம் பெருமை கொண்டு அவர் மென்மேலும் சிறப்பான பல சேவைகளை செய்ய வேண்டுமென மனநிறைவுடன் வாழத்துகிறோம்.

இவ்வண்ணம்
தலைவர், பணிப்பாளர், பணியாளர்கள்
தெல். ப. நோ. கூ. சங்கம்
தெல்லிப்பளை.

(C/4678)

## நூல் வெளியீட்டு விழா

ச. ஆ. பாலேந்திரன் B.A.(Cey)
(பொருளாளர், கொழும்புக் கம்பன் கழகம்)

எழுதிய

### காரைநகர் தொன்மையும் வன்மையும்

இடம்: நடராசா மண்டபம் (காரைநகர் இந்துக் கல்லூரி)
காலம்: 21.07.2002 ஞாயிற்றுக்கிழமை, முற்பகல் 10.00மணி

*தலைமை:*
பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை அவர்கள்
(துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்)

*பிரதம விருந்தினர்:*
கௌரவ தி.மகேஸ்வரன் அவர்கள்
(இந்து கலாசார அமைச்சர்)

**நிகழ்ச்சி நிரல்**

*மங்கள விளக்கேற்றல்:-* திரு.ஆ.குணரத்தினம்
பிரபல வர்த்தகர் (குகன்ஸ் டோர்ஸ், யாழ்ப்பாணம்)

*கடவுள் வாழ்த்து* :- திருமதி இராசமலர் நடராசா

*வரவேற்புரை* :- பண்டிதர் மு.வேலாயுதபிள்ளை
(அதிபர், காரைநகர் இந்துக்கல்லூரி)

*ஆசியுரை* :- பண்டிதர் சிவஸ்ரீ க.வைத்தீஸ்வரக் குருக்கள்
(தமிழ் வளர்ச்சிக் கழகம், காரைநகர்)

*தலைமையுரை*

*பிரதமவிருந்தினர் உரை*

*வெளியீட்டுரை* :- பேராசிரியர் வி.சிவசாமி
(வருகை விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம)

**முதன்மைப் பிரதி வழங்கல்**

*முதற் பிரதி பெறுநர்* :- திரு.இ.எஸ். பீ.நாகரத்தினம்
(பிரபல வர்த்தகர், இ.எஸ். பேரம்பலம் அன் சன்ஸ்)

*ஆய்வுரை* :- கலாநிதி க. குணராசா (செங்கையாழியன்)
(பிராந்திய ஆணையாளர், யாழ்ப்பாணம்)

*நன்றியுரை*

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**பேராசிரியர் சிவபாதசுந்தரம் மகேஸ்வரன் நினைவுப் பேருரை**

19.07.2002 பி.ப 3.00 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கைலாசபதி கலையரங்கில் நடைபெறவிருந்த மேற்படி நினைவுப் பேருரை தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது என்பதனை இத்தால் அறியத்தருகின்றேன். புதிய திகதி பின்னர் அறியத்தரப்படும்.

பேராசிரியர்
பொ.பாலசுந்தரம்பிள்ளை
துணைவேந்தர்

(C/4677)

## CATWAS .COM COMPUTER ACADEMY

நோர்வே தமிழ் கத்தோலிக்க நலன்புரிச் சங்க (CATWAS) ஆதரவில் அமலமரித்தியாகிகள் நடத்தும் கணணிப் பயிற்சிக் கல்வித்திட்டம் ஆரம்பமாகிறது. **IBS (INTERNATIONAL BISNESS SYSTE OVERSEAS (PVT) LTD)** நிறுவன அனுசரணையுடன் சான்றிதழ் வழங்கப்படும். இடம்பெயர்ந்த வறிய மாணவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும்.-

விண்ணப்ப படிவத்தினை பின்வரும் இடங்களில் பெற்றுக் கொள்ளலாம். முடிவுத் திகதி 30.07.2002 மேலதிக தொடர்புகளுக்கு:

இயக்குநர்
அருள்திரு. சு. ஸ்ரனிஸ்லோஸ், அ.ம.தி
மரிய அகம்
48, கோவில் வீதி
யாழ்ப்பாணம்

657/1 'தொடர்பகம்'
ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்

(5699)

## FLASH VACANCY COMMUNITY FACILITATORS

### Vacancy

The Durable Solution Assessment Team as a part of UNHCR Project Implementaion is looking for: Community Facilitators.

Candidates are expected to meet the following requirements:

- Secondary Education with at least 3 years experience in Social Services Activities.
- Ability in originating project proposals in field of Human Rights with extended report writing skills.
- Field work experience.
- Good computer skills.
- Languages: Fluency in: Tamil, English (spoken and written), knowledge of Sinhala language would be an asset.
- Good interpersonal skills, team work and flexibility.

Application and C.V should be forwarded to below address on or before: 24th July 2002.

UNHCR
223, Temple Road,
Jaffna.

(5702)

## தச்சுத் தொழிலாளர்கள் தேவை

மேலதிக விபரங்கட்கு
**நூலின்ஸ்**
6, நல்லூர் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

(5706)

## இடம்மாற்றம்

அனைத்து கொம்பியூட்டர் ஓவ் (f) செற் பிறிண்டிங் வேலைகளுக்கும

**கங்கை**
ஓவ்(f)செற் பிறிண்டேர்ஸ

184A, நாவலர் வீதி,
பெருமாள் கோவிலடி,
யாழ்ப்பாணம்.




## FLASH VACANCY MICRO PROJECT TEAM

### Vacancy

The Micro Project Team as part of Project Implementation for Jaffna District is announcing the following vacancies in order to assist Government Implementing Partner:

1. Field Monitoring Officer
2. Field Finance Officer
3. Computer clerk

Candidates are expected to meet following requirements:

- Secondary education with good experience in Community Activities.
- Fluency in English, both spoken and written.
- Good inter-personal skills, team work and flexibility.
- Expriance in project documentation and computer skills.
- Field Experience in assessment and monitoring projects (post 1and 2)
- Excellent report writing skills (post 1and2)
- Ability to perforn independent office management (post1and 2)
- Holding of Motorcycle driving licence (post 1and 2)
- Good co-ordination abilities with other project partners (post 1,2,3)

**Candidates should be aware that : Over 60% OF THE WORK TIME WILL BE SPENT IN THE FIELD**

Applications and C.V.should be forwarded to below address on or before: 26th July 2002
UNHCR
223, Temple road, Jaffna

(5701)

## கண்ணீர் அஞ்சலி

### திருமதி ச. மகேஸ்வரி

கச்சாய் கிராம சபையின் முன்னாள் உறுப்பினரும், கச்சாய் கிராமத்தின் பிரபல சமூக சேவையாளருமாகிய காலஞ்சென்ற திரு. சரவணமுத்து அவர்களின் அன்பு மனைவி

**திருமதி ச. மகேஸ்வரி**

அவர்களின்மறைவினால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்.

நண்பர் குழாம்,
வினோபா சனசமூக நிலையம்
கச்சாய்

(5698)

## கூடைப்பந்தாட்டப் போட்டி - 2002

11ஆவது வருடாந்த நிகழ்வாக **யாழ் ஹற்றன் நஷனல் வங்கியினால** நடாத்தப்படும் ஆண்டு 2002ற்கான கூடைப்பந்தாட்டப் போட்டி கழகங்கள்/பாடசாலைகளுக்கிடையே **நேற்று (18.07.2002) வியாழக்கிழமை முதல் யாழ் இந்துக்கல்லூரி** ஆடுகளத்தில் நடைபெறுகின்றன என்பதை அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தந்து போட்டிகளை கண்டுகளிக்க வருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நேரம் பிற்பகல் - 3.30 மணி

**ஹற்றன் நஷனல் வங்கி**
**உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி**

**இன்று மோதும் அணிகள்**

19th Friday

| | | |
|---|---|---|
| Jaffna Hindu College | Vs St Johns College | - 4.00 P.m |
| Jaffna Central College (A) | Vs Kokuvil Hindu College | - 5.00 P.m |

(C/4674)


இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.07.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.